பிரதம தபாற்கந்தோரில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது.

# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 7 | இதழ் 20 | மே 23 1969 | பக்கங்கள் 8 | விலை சதம் 10

### மா சே-துங் சிந்தனை

நமது எதிரிகள் யார்? நமது நண்பர்கள் யார்? புரட்சியில் இந்தப் பிரச்சினை முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. சீனுவின் கடந்த காலப் புரட்சிகள் எல்லாம் சாதித்தவை மிகக் குறைவாக இருப்பதன் அடிப்படைக் காரணம், அவை உண்மையான பகைவர்களைத் தாக்குவதற்கு உண்மையான நண்பர்களை ஐக்கியப்படுத்த தவறியதேயாகும்.

# பொது விரோதி யார்?

**இந்த நாட்டிலுள்ள சகல மக்களினதும் - அதாவது சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் மத்தியிலுள்ள சுரண்டப்பட்ட அடக்கி ஒடுக்கப்பட்ட வெகுஜனங்களின - பொது எதிரி யார்? இந்த நாட்டில் இன்னும் இருந்துவரும் அந்நிய ஏகாதிபத்தியமும், அதற்கு வால்பிடிக்கும் தரகு முதலாளித்துவமும், நிலப்பிரபுத்துவ, பிற்போக்கு சக்திகளுமே. இந்த சக்திகள் முற்று முழுதாக இந்நாட்டு மண்ணிலிருந்து துடைத்தெறியப்படாதவரை இந்நாட்டு மக்களுக்கு விமோசனமே கிடையாது.**

ஆனால், இந்த உண்மையை எமது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றைத் தவிர இந்நாட்டிலுள்ள வேறு எந்த அரசியல் கட்சியும் எடுத்துக் கூறுவதில்லை.

நாடு சுதந்திரமடைந்து இருபது வருடங்களுக்கு மேலாகிவிட்டன என கூறப்படுகிறது. ஆனால், உண்மை என்ன? இன்னும் வெள்ளை ஏகாதிபத்தியத்தின் பிடிப்பு சகல துறைகளிலும் அப்படியே இருந்து வருகிறது. பிரித்தானிய ஏகாதிபத்திய (சோல்பரி) அரசியல் சட்டம்தான் இன்றும் அமுலில் இருந்து வருகிறது. கவர்னர் ஜெனரல்கூட பிரிட்டிஷ் ''மகாராணி''யின் பிரதிநிதியாகத்தான் இருந்து வருகின்ருர். அரசாங்க நிர்வாக இயந்திரம், பொலிஸ், இராணுவம், பயனற்ற பாராளுமன்றம் ஆகியவையெல்லாம் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தால் ஆக்கப்பட்டவைதான். நாட்டின் ஜீவநாடியான பொருளாதாரத் துறையிலும்கூட ஏகாதிபத்தியப் பிடிப்பு இன்னும் தளரவில்லை. பெரும் பெரும் தேயிலைத் தோட்டங்கள், வங்கிகள், ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகங்கள், பெரும் பெரும் கம்பெனிகள், வியாபார ஸ்தாபனங்கள் எல்லாம் ஏகாதிபத்தியவாதிகளின் கட்டுப்பாட்டில்தான் இருந்து வருகின்றன. கல்வி, கலாச்சாரத் துறையில்கூட ஏகாதிபத்தியச் செல்வாக்கு ஒழியவில்லை. கல்வி அமைப்பும், கற்பிக்கும் பாடமுறைத் திட்டங்களும் கூட ஏகாதிபத்தியவாதிகள் வகுத்த வழியில்தான் நடத்தப்படுகின்றன. சுருங்கச் சொன்னல் பிரித்தானியர்கள் தமது சுரண்டலையும், தமது ஏகாதிபத்திய நலன்களையும் பாதுகாக்கக்கூடிய வகையில்தான் ஒவ்வொன்றையும் ஆக்கிவிட்டிருக்கிருர்கள். இந்த நிலையில் நாடு சுதந்திரம் அடைந்துவிட்டதென்று சொல்ல முடியுமா?


அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு தரகு வேலைபார்த்து, அதன் ஏவல் நாயாகவும், காவல் நாயாகவும் இருந்துவரும் உள்ளூர் நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ பிற்போக்கு வர்க்கங்களோ வெனில், ஏகாதிபத்தியச் சுரண்டலையும், நலன்களையும் பாதுகாத்து நிற்கின்றன. சுரண்டல், சாதி ஒடுக்குமுறை, வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை போன்ற விலங்குகள் இன்னும் தகர்க்கப்படவில்லை. இந்த நிலையில் மக்கள் விடுதலையடைந்துவிட்டார்கள் என்று கூற முடியுமா?

ஆகவே, நாடு உண்மையான சுதந்திரத்தைப் பெற, மக்கள் உண்மையான விடுதலையைப் பெற ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், பிற்போக்கு முதலாளித்துவம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் யு. என். பி. ஆகியவற்றை எதிர்த்துப் போராடவேண்டும் என்று கூறுகின்ருேம். இவைதான் இந்நாட்டு மக்களின் உண்மையான பொது விரோதி என்கிருேம். இப்பொது விரோதியையும், வெகுஜனங்களின் துன்பங்களுக்கும் நாட்டின் பிற்போக்கு நிலைமைக்கும் காரணமான சுரண்டல் அமைப்பையும் எதிர்த்துப் போராடி ஒழித்துக்கட்ட வேண்டுமானல் பாராளுமன்றப் பாதையில் முடியாது, புரட்சிகரப் போராட்டம் மூலம்தான் முடியும் என்கிருேம். இந்த லட்சியத்தை நிறைவேற்றுவதற்கு சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் மத்தியிலுள்ள தொழிலாளர்கள், விவசாயிகள், உழைக்கும் இதர வெகுஜனங்கள், வாலிபர்கள், மாணவர்கள், புரட்சிகர புத்திஜீவிகள், தேசபக்த சக்திகள் அனைவரும் ஓரணியின் கீழ் - புரட்சிகர தலைமையின் கீழ் ஐக்கியப்பட வேண்டும் என்கின்றேம். இந்த ஐக்கியந்தான் உண்மையான தேசிய ஐக்கியத்திற்கு வித்திட்டு அதனை மலரச் செய்யும் என்கின்றேம்.

ஆனல், இந்த உண்மைகள் மக்கள் மத்தியிலிருந்து மறைக்கப்படுகின்றன. நாம்கூறும் சரியான பாதைக்கு மக்கள் வராதபடி அவர்கள் திசைதிருப்பப்படுகிருர்கள். இந்தக் கைங்கரியத்தை பிற்போக்கு சக்திகள் தான் செய்கின்றன என்பதில்லை. முக்கூட்டு கட்சிகள் கூட இதனைத்தான் செய்கின்றன. இந் நாட்டு மக்களின் உண்மையான பொது எதிரியின் மீது மக்களின் கவனத்தை திருப்புவதை விட்டு விட்டு, சில்லறை விஷயங்களி லெல்லாம் அவர்களின் கவனத்தை திருப்புகிருர்கள். பாராளுமன்

8-ம் பக்கம் பார்க்க

### போலிஸ் அடக்குமுறையைத் தகர்ப்போம்!





மே தினத்தன்று யாழ். நகரில் ''மே தின ஊர்வலத்தை'' காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கிய யு. என். பி. பொலிஸின் மிருகத்தனத்தைக் கண்டித்து மே 15ந் தேதி சுன்ஞகத்திலிருந்து யாழ். நகர் வந்த பிரமாண்டமான கண்டன ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் காட்சிகள்.

## தலையங்கம்

# தேர்தல் ஸ்டண்ட்

வட பகுதியில் அச்சுவேலி, அல்வாய், கரவெட்டி ஆகிய ஊர்களிலுள்ள பௌத்த பாடசாலைகளை அரசாங்கம் ஜூன் முதலாந் தேதி கையேற்க முடிவு செய்தது குறித்து தமிழரசுக் கட்சி பெரும் கூச்சலைக் கிளப்பியுள்ளது. அரசாங்கம் இந்த முடிவை மாற்றவேண்டும், இல்லையேல் நேரடி நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் என்றும் மிரட்டியிருக்கிறது.

கடந்த அரசாங்கங்கள் கையேற்ற சில சேவைகளிலும் தமிழரசு கட்சி தனது வர்க்க நலன்களுக்காக எதிர்ப்பையே தெரிவித்து வந்துள்ளது. சகல பாடசாலைகளையும் ஸ்ரீமாவோ அரசாங்கம் கையேற்றபோது கூட தமிழரசு கட்சி தனது கடும் எதிர்ப்பைத்தெரிவித்ததை நாடு மறக்கவில்லை. இப்போதும் மேலே கூறிய மூன்று பாடசாலைகளை அரசாங்கம் கையேற்பதை எதிர்க்கிறது. அற்ப சொற்ப முற்போக்கு நடவடிக்கைகளைக் கூட எதிர்ப்பதுதான் பிற்போக்கு தமிழரசின் பரம்பரைக் குணம்; அதன் வரலாறு.

மேற்படி மூன்று பாடசாலைகளும் அப்பகுதிகளிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கானவை. அவர்களுக்கு இப்பாடசாலைகளை ஏனைய பாடசாலைகளின் தரத்திற்கொப்ப நடத்த முடியவில்லை. அதனால் இப்பாடசாலைகளை அரசாங்கம் கையேற்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

ஆனால், தாழ்த்தப்பட்ட மக்களின் இந்த முடிவில் தமிழின் பெயரால் தலையிட்டு தில்லுமுல்லு செய்கிறது தமிழரசு கட்சி, இது ஒரு தேர்தல் ''ஸ்டண்ட்.''

சமூக வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் 'உயர்சாதி'யினரால் நசுக்கப்பட்டு, அடக்கி ஒடுக்கப்பட்டு உரிமைகளை இழந்து வாழும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தமிழரசுக் கட்சி இதுவரை எதுவுமே செய்தது கிடையாது. தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளை அளிக்க வேண்டும் என மேடைகளில் மட்டும் பேசுவார்களே அன்றி, நடைமுறையில் அதற்கான எந்த ஒரு உருப்படியான காரியத்தையும் செய்ததில்லை. மாறாக திரை மறைவில் தமிழரசுத்தலைவர்கள் '' சாதி வெறியரின் பக்கமே நின்று வருகின்றனர்.''

தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலயப் பிரவேச இயக்கத்தில் அவர்கள் நடந்து கொள்ளும் முறையே இதற்குப் போதிய சான்றாகும். சுருங்கச் சொன்னால், தமிழரசுத் தலைவர்களின் உள்ளக் கிடக்கையும் அவர்களின் போக்கும் பட்டப்பகல் வெட்ட வெளிச்சம். ஆகவே, இப்போது பாடசாலைப் பிரச்சினையில் அவர்கள் எழுப்புகின்ற கூச்சல், தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களுக்காக அல்ல. தமிழ் மக்களின் நலன்களுக்காக க் கூட அல்ல என்று துணிந்து சொல்லலாம். ஏனெனில், தமிழரசு கட்சி தமிழினம் தமிழ் என்ற பெயரால் தனது பிற்போக்கு, முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ நலன்களுக்காக பச்சை வகுப்புவாதத்திற்கு உயிரூட்டி அரசியல் சதுரங்க விளையாட்டை நடத்தி வருகிறதே தவிர, பெரும்பாலான - சாதாரண தமிழர்களின் நலன்களுக்காக அல்ல. இந்த வகையில் அது எதனையும் சாதித்ததும் இல்லை. இப்போது முன் கூறிய மூன்று பாடசாலைகள் பற்றிய பிரச்சினையில் கிளப்புகின்ற கூச்சல் கூட விரைந்து வந்துக்கொண்டிருக்கும் தேர்தலில் தனது சரிந்து போன நிலையைச் சற்று தூக்கி நிறுத்தும் நோக்கம் கொண்டதுதான்.

ஏகாதிபத்திய வால்பிடியும், படுபிற்போக்கு முதலாளித்துவ யு. என். பி. யுடன் தமிழரசு கட்சி கூட்டுச் சேர்ந்ததிலிருந்து அதன் செல்வாக்குச் சட சட எனச் சரிந்துவிட்டது. இந்த நிலைமை தேர்தலில் தனக்கு பலத்த தாக்கத்தை ஏற்படுத்தும் என கருதிய தமிழரசு கட்சி, யு. என். பி. யுடன் ஒத்துப்பேசி, தான் அரசாங்கத்திலிருந்து விலகிவிட்டதாகக் கூறிக்கொண்டது. ஆனால், இந்த ஏமாற்று அவ்வளவு எடுபடவில்லை. ஆதலால், யு. என். பிக்கு ஏதாவது ஒரு ''எதிர்ப்பை'' காட்டியாவது மக்களின் ஆதரவை தம்பக்கம் திருப்ப வேண்டுமென்று கருதிய தமிழரசு கட்சி அதற்கான விஷயங்களை தேடி அலைந்து, இப்போது இந்த பாடசாலைப் பிரச்சினையைப் பிடித்துக்கொண்டது. ஆகவே, இது ஒரு தேர்தல் ஸ்டண்ட் என்பதில் ஐயமில்லை.

யு. என். பி. அரசாங்கத்தைப் பொறுத்தவரை அது தாழ்த்தப்பட்ட மக்களின் பால் கருணை கொண்டு இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் தமது உரிமைகளுக்காக நடத்தும் போராட்டத்தில்—குறிப்பாக ஆலயப் பிரவேச இயக்கத்தில் யு. என். பி. அரசாங்கமும், அதன் பொலிஸூம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராகவே இருந்து வருகின்றன. சமூகக் குறைபாட்டு ஒழிப்புச் சட்டத்தைக்கூட சரிவர அமுல் நடத்த மறுக்கிறது யு. என். பி. ஆட்சி, இந்த நிலையில் யு. என். பி. தாழ்த்தப்பட்ட மக்களின் நலன் கருதித் தான் இப் பாடசாலைகளை கையேற்க முடிவு செய்தது என்று எப்படிச் சொல்லமுடியும். அதுமட்டுமன்று, அதுவும் தேர்தல் நெருங்கி வரும் இச் சமயத்தில் இந்த நடவடிக்கையை எடுக்க முடிவு செய்தது யு. என். பி. யின் ஒரு தேர்தல் ஸ்டண்டே. சிங்கள மக்கள் மத்தியில் சென்று, தமிழரசு கட்சி எதிர்த்த போதிலும் வடக்கே கூட பௌத்த நலன்களை ஸ்திரப்படுத்தியிருக்கிறோம். பௌத்த மதத்தில், எமக்குள்ள அக்கறை வேறு எந்தக் கட்சிக்கும் இல்லை என்று சொல்லலாமல்லவா?

மொத்தத்தில் யு. என். பி., தமிழரசு கட்சிகளின் நோக்கம் ஒன்றுதான்.

## சரித்திர முக்கியத்துவம் பெற்ற

# இரு அறிக்கைகள்

மகத்தான சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 9வது தேசிய மாநாட்டில் பூரணமாக விவாதிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட அரசியல் அறிக்கையும், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சட்ட திட்டங்களும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இரு தஸ்தாவேஜுகளாகும். இவை, மார்க்சிஸம்-லெனினிஸம் - மா சேதுங் சிந்தனைக்கு மேலும் கிடைத்துள்ள பெரும் பங்காகும்.

இந்த இரு தஸ்தாவேஜுகளும் சீனாவின் முன்னேற்றத்திற்கு வழி காட்டுபவை மட்டுமல்ல, சர்வதேச புரட்சிகர இயக்கத்திற்கும் வழி காட்டக் கூடியவையாகும்.

உப-தலைவர் தோழர் லின் பியௌவின் அரசியல் அறிக்கை மா சேதுங் சிந்தனையை சிறப்பான முறையில் உள்ளடக்கியுள்ளது. இது தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தைநன்கு சித்தரிக்கிறது. தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியை இறுதி வரை எப்படி முன்னெடுத்துச் செல்வது என்பதை விளக்குகிறது, கட்சியை கட்டி வளர்த்ததில் கிடைத்த பாடங்களை எடுத்துக் கூறுகிறது, சோவியத் திரிபுவாத துரோகக் கும்பலின் தலைமையிலான நவீன திரிபுவாதத்தை சரியான முறையில் விமர்சித்து, நிராகரித்துள்ளது. லியோ சோ ஷியின் துரோகப் போக்கை அம்பலப் படுத்துகிறது, பாட்டாளி வர்க்கத்திற்கெதிரான — வெகுஜனங்களுக்கெதிரான சகல விதமான தீய நச்சுக் கருத்துக்களையும் செயல்களையும் எதிர்த்துச் சாடும்படி மக்களுக்கு அறைகூவல் விடுக்கிறது. சுருங்கச் சொன்னால் மார்க்சிஸம்-லெனினிஸம் - மா சேதுங் சிந்தனை இந்த தஸ்தாவேஜ் முழுவதிலும் ஒளி பாய்ச்சி நிற்கிறது.

இது, ஆழமாகக் கற்க வேண்டிய ஒரு அறிக்கையாகும்; புரட்சிகர இயக்கத்தில் அவ்வப் போது தோன்றும் பிரச்சினைகளுக்கு வழிகாட்டக் கூடிய தஸ்தாவேஜாகும்; உலகம் முழுமைக்கும் பிரயோகிக்கக் கூடிய மார்க்சிஸம் — லெனினிஸமாகும். இதன் பொதுவான கோட்பாடுகள் இலங்கையின் யதார்த்த நிலைமைகளுக்கேற்ப கவனத்துடன் கையாளக் கூடியவை.

மாநாட்டில் விவாதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சட்ட திட்ட அறிக்கை மற்றொரு அற்புதமான தஸ்தாவேஜு ஆகும். அதன் பொது வேலைத் திட்டம் உலகிலுள்ள புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் உகந்தவை. அதன் கோட்பாடுகள் சோஷலிஸப் புரட்சியை தொடர்ந்து கொண்டு செல்வதற்கும், கம்யூனிஸ்ட் ஸ்தாபனங்களிலும், புரட்சிகர இயக்கங்களிலும் மார்க்சிஸ-லெனினிஸ - மா சேதுங் சிந்தனைத் தலைமையைத் தொடர்ந்து பாதுகாப்பதற்கும் வழிகாட்டுகின்றன. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றிகரமான சாதனைகளுக்கு இக் கோட்பாடுகள் தான் வழி காட்டின மேலும் வழி காட்டுகின்றன. இதன் ஒவ்வொரு சரத்தும் மா சேதுங் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டவை.

இந்த இரு முக்கிய தஸ்தாவேஜுகளையும் உலகிலுள்ள மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் - மா சே-துங் சிந்தனைவாதிகள் ஊன்றிப் படிக்க வேண்டும். அவற்றின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் தத்தம் நாடுகளின் யதார்த்த நிலைமைகளுக்கேற்ப - புரட்சிகர நிலைமைகளுக் கேற்ப பிரயோகிக்கவும் கற்றுக் கொள்ள வேண்டும்.

இலங்கையிலுள்ள மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் - மா சேதுங் சிந்தனைவாதிகளும் கட்சித் தோழர்களும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இவ்விரு தஸ்தாவேஜுகளையும் கருத்தூன்றிப் படிப்பது அவசியம். இலங்கையின் யதார்த்த நிலைமைகளுக் கேற்ப புரட்சிகரப் பாதையில் முன் செல்வதற்கு-மார்க்சிஸ - லெனினிஸ-மா சேதுங் சிந்தனையைப் பிரயோகிப்பதற்கு இவ்விரு தஸ்தாவேஜுகளும் வழி காட்டக் கூடியவை என்பதை மனதில் கொண்டு படிக்க வேண்டியவையாகும்.

# சோவியத் யூனியனில் முதலாளித்துவ சீரழிவு

சோவியத் யூனியனில் இரு வாலிபர்கள் பொது இடத்தில் பகிரங்கமாக மூன்று பெண்களை அவர்களது கணவர்கள், குழந்தைகளின் கண்ணெதிரே பாலாத்காரமாக கற்பளித்தனர் என சமீபத்தில் ஓர் செய்தி வெளியாகியுள்ளது. இச் செய்தி சோவியூனியனில் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள திரிபுவாதிகள் எத்தகைய படுகுழிக்குள் சோவியத் யூனியனை அமிழ்த்தியுள்ளார்கள் என்பதை உலகுக்கு அம்பலப்படுத்தியது.

மாமேதை தோழர் லெனினது தலைமையில் ''அக்டோபர் புரட்சியை'' நிறைவேற்றி உலகில் முதல் தொழிலாளர் வர்க்க அரசையும், தொழிலாளர் வர்க்க சர்வாதிகாரத்தையும் நிலைநாட்டி, தோழர் ஸ்டாலின் தலைமையில் உலகில் முதல் சோஷலிஸ்ட் நாடாக மலர்ந்த சோவியத் யூனியன் இன்று இத்தகைய சீரழிவில் சிக்கித் தவிப்பதற்கு வித்திட்டவர்கள் துரோகி குருஷ்சோவும் அவனது சீடர்களான திரிபுவாதிகளுமே. மார்க்சிஸ - லெனினிஸத்திற்கு துரோகம் செய்து, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிராகரித்து, முதலாளித்துவத்தை மீண்டும் உயிர்ப்பித்தனர் சோஷலிஸத்தின் விரோதிகளான திரிபுவாதிகள். அதன் பலன் முதலாளித்துவத்தின் உடன் பிறந்த சிந்தனைகளும், காமகலாச்சாரங்களும், கொலை. கொள்ளை, கொள்ளி, களவு, கற்பளித்தல் போன்ற நீசத்தனங்களெல்லாம் புற்றீசல் போல் சோவியத் யூனியனில் கோரத் தாண்டவமாடுகின்றன.

தம் மனைவிகள் தமது கண்களுக்கு முன்னாள் பகிரங்கமாக, பலாத்காரமாக கற்பளித்து நர வேட்டையாடப்படும் போது கணவர்கள் செயலற்றிருந்தார்கள் என்பதை கவனிக்கும் போது, சோவியத் திரிபுவாதிகள் வீரமிக்க சோவியத் மக்களை கோழைகளாக மாற்றிவருகின்றனர் என்பதையே எடுத்துக் காட்டுகிறது. சோவியத் யூனியனில் முதலாளித்துவத்தை குடியமர்த்துவதற்காக சோவியத் மக்களை குடிகாரர்களாக்கியுள்ளார்கள் மாஸ்கோ நகரில் நூற்றுக்கு 65% விகிதம் குடியினால் மரணமடைவதாக திரிபுவாதிகளின் பத்திரிகைகளே கூறுகின்றன.

திரிபுவாதிகளின் முதலாளித்துவ மீட்பை எதிர்த்து பொங்கியெழும் சோவியத் மக்களை குடிவெறியர்களாகவும், காமுகர்களாகவும். கொள்ளைக்காரர்களாகவும், திருடர்களாகவும், கோழைகளாக்கவுமே திரிபுவாதிகள் முயல்கின்றனர். அதன் பிரதிபலிப்பே மேற் குறிப்பிட்ட சம்பவம்.

> ''பூர்ஷுவா தத்துவம் அல்லது சோஷலிஸ்ட் தத்துவம் இவ்விரண்டில் ஒன்றைத்தான் தேர்ந்தெடுக்க முடியும். இவ்விரண்டிற்கிடையே வேறு வழி கிடையாது,.... ஆகவே, எவ்விதத்திலாவது சோஷலிஸ தத்துவத்தைக் குறைத்து மதிப்பிட்டாலும், அதிலிருந்து கடுகளவாவது விலகிச் சென்றாலும் முதலாளித்துவத்தை பலப்படுத்துவதென்றே பொருள்.''
>
> — தோழர் லெனின்

# பொது விரோதியான வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கெதிராக போர் தொடுக்கும் பணி தோட்டத் தொழிலாளரையும் சிங்கள விவசாயிகளையும் சார்ந்துள்ளது

**(தி. மு. க. வும், இலங்கையும் என்ற கட்டுரையின் சென்ற வாரத் தொடர்)**

தி. மு. க. பூச்சாண்டி காட்டுவது, சிங்களப் பொது மக்களிடையே இந்திய வம்சா வழித் தோட்டத் தொழிலாளர்கள் பற்றிய இனத் துவேஷத்தை வளர்ப்பதற்காகவே. அத்துடன், வெகு விரைவில் தேர்தல் நடக்கப்போகின்றது. இந்த நாடகத்தில் இனத் துவேஷ வெறி நன்றாக வேலை செய்யும்; அத்துடன், இது, புரட்சிவாதிகளை பிளவுபடுத்திக் கட்டுப்படுத்தி வைப்பதற்கு பிற்போக்குவாதிகளால் கையாளப்படுகின்ற ஆயுதமுமாகின்றது.

இவை தவிர மிக ஆழமான மற்றொரு காரணமும் உண்டு. இந்திய வம்சாவழித் தொழிலாளர்கள் மத்தியில் பிற்போக்குத் தலைவர்களான தொண்டமான் போன்றோரின் செல்வாக்குப் படிப்படியாக குறைந்து கொண்டு வருவதை ஆளும் பிற்போக்குவாதிகள் கணித்துக்கொள்ள தவறவில்லை. இன்றைய தொழிலாளர்கள் தோழர் மா சேதுங்கின் புரட்சிகரச் சிந்தனைகளால் கவரப்படுகின்றனர். இலங்கையில் புரட்சிகர இயக்கமொன்று வெற்றியுடன் செல்லவேண்டுமெனில், சிங்கள விவசாயிகளும் தோட்டத் தொழிலாளர்களும் அவசியம் ஒன்றுபடல் வேண்டும் என்பது பிற்போக்குவாதிகளும் அறிந்த விஷயம் தான். எனவே, இவர்களைப் பிரித்துவைப்பதில் பிற்போக்குவாதிகள் இராப் பகலாக ஈடுபட்டால் அதில் வியப்பில்லை.

### தவறாக வழிகாட்டிய பிற்போக்கு தலைவர்கள்

இந் நிலையில், தம்முடன் பிணைந்து இயங்க வேண்டிய தோட்டத் தொழிலாளர்கள் தமது நண்பர்கள் என்பதை சிங்கள மக்களிடையே உள்ள புரட்சிகர இயக்கங்கள் மறத்தல் கூடாது. பஞ்சம் குடிகொண்ட தென்னிந்தியாவிலிருந்து தொண்டமானின் முன்னோர்களான பெரிய கங்காணிகளால் இங்கு கொண்டு வரப்பட்டவர்களே இத் தொழிலாள வம்சமாகும். வெள்ளைக்காரத் துரைமாரின் ஏஜெண்டுகளான கங்காணிமார், தேயிலைச் செடியின் கீழ் தங்கம் விளைகிறது என கூறி இத் தொழிலாளர்களைக் கூட்டி வந்தனர். வழியில் இவர்கள் பட்ட துயரங்கள் பல. சிலர் வழியில் இறந்தும் விட்டனர். ஆரம்பத்தில் எதுவித சுகாதார வசதிகளுமற்ற படுகேவலமான சூழ்நிலையில் வேலை செய்ததால் பேதி நோய்கூட பரவத் தொடங்கியது. பிரசித்தி பெற்ற முடிக்குரிய காணிச் சட்டத்தின் கீழ் கண்டிய விவசாய மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்களில் தோட்டத் தொழிலாளர்களைக்கொண்டு வெள்ளைத் துரைமார்கள் வேலை வாங்கினர். வெள்ளை ஏகாதிபத்தியத்தால் கொடுமைக்குள்ளான சுரண்டப்பட்ட மக்கள் இந்திய வம்சா வழித் தொழிலாளரும் அவர்களுடன் சேர்ந்து, நிலங்களினின்றும் விரட்டியடிக்கப்பட்ட கண்டிய விவசாயிகளுமே. எனவே, பொது எதிரியாகிய வெள்ளை ஏகாதிபத்தியத்திற் கெதிராக போர் தொடுக்கும் பணி இவ்விரு வர்க்கத்தினரையும் சார்ந்துள்ளது.

இவ்வாறு நடவாமல் தடுப்பதற்கே பிற்போக்குவாதிகள் இன்று தீவிரமாக முயலுகின்றனர். அன்றைய இடதுசாரி கட்சிகள் கடைப்பிடித்த தவறான கொள்கைகளினால், இந்திய வம்சாவழித் தொழிலாளர்கள், இன வெறியர்களையும் பிற்போக்குவாதிகளையும் கொண்ட கட்சிகளில் தஞ்சம் புகுந்தனர். வள்ளியப்பா செட்டியார், மோத்தா, இப்போது தொண்டமான், அசீஸ் போன்றவர்கள் தோட்டத் தொழிலாளி வர்க்கத்தின் மீது குதிரை விட்டனர். இந்தியாவே தமது தாய்நாடு, காந்தியே தலைவர் என்றெல்லாம் எண்ணும்படி இத் தலைவர்கள் வழிகாட்டினர். காந்திக்கு ஜே! நேருவுக்கு ஜே! என்றெல்லாம் கூச்சல் போட்டு இலவுகாத்த கிளி போல் இந்திய பிற்போக்குத் தலைவர்களையும் அவர்களின் ஏவல் நாய்களான தொண்டமான் கும்பலையும் காத்திருந்தனர்.

### சமசமாஜ - திரிபுவாத கும்பலுக்கு வேட்டுத்தான் வேண்டியிருந்தது.

கிழவன் டி. எஸ். சேனநாயக்கா நிலைமையை நன்கு கவனித்தார். தோட்டத் தொழிலாளி வர்க்கத்தால் ஏற்படக் கூடிய அபாயத்தை நன்கு உணர்ந்தார். இவர்களின் வாக்குரிமையைப் பறிப்பதே சரியான வழி என கண்ட அவர், 1948 ல் ஒருவித எதிர்ப்புமின்றி தொழிலாளி வர்க்கத்தின் வாக்குரிமையைப் பறித்து வெற்றியீட்டினார். அப்போது இடதுசாரித் தலைவர்கள் ஒருவித எதிர்ப்பையும் காட்டாது யு. என். பி. க்கு பலமான வெற்றியை ஈட்டிக் கொடுத்தனர். ஆனால், இன்றைய நிலைமையோ வேறு. தோட்டத் தொழிலாளர்கள் விழிப்படைந்து விட்டனர். அவர்கள் அதனை தாமாகவே நடைமுறையில் உணர்ந்து கொண்டனர். எனவே, இன்று எமது கட்சியும், செங்கொடிச் சங்கமும் மட்டும்தான் தொண்டமான் சங்கத்தை எதிர்க்கும் ஒரு மாபெரும் சக்தியாக விளங்குகிறது என்பதில் வியப்பில்லை.

### புரட்சிகர சிந்தனை பரவுகிறது.

''இன்று தோட்டத் தொழிலாளர்கள் இந்தியாவுக்குத் துதி பாடுவதில்லை!'' மாறாக வாழ்க, இலங்கை என கோஷிக்கிறார்கள். காந்தியும், நேருவும் தொழிலாளர்களின் தலைவர்கள் என கருதிய நிலை மாறி, தோழர் மாசே துங்கை உலகப் பாட்டாளி வர்க்கத்தின் தலைவரென உணர்ந்து, ''மாசே துங் வாழ்க!'' என கோஷிக்கின்றனர். அந்த உலகப் பாட்டாளி வர்க்கத்தலைவரின் பதக்கங்களை மார்பில் அணிவதிலும், அவருடைய படங்களைத் தொங்கவிடுவதிலும் பெருமை அடைகிறார்கள். தோட்டத் தொழிலாளர்களின் புரட்சிகரச் சிந்தனைகளும் செயல் முறைகளும் இலங்கையின் ஏனைய தொழிலாளர்களுக்குக் குறைந்ததல்ல என்பதை நிரூபித்துக்கொண்டு வருகின்றனர்.

பூண்டுலோயா தோட்டம் தொண்டமானின் கோட்டைகளில் ஒன்று. இங்கே அசீஸ் கூட நுழைய முடியாது. அண்மையில் எமது செங்கொடிச் சங்கம் ஐந்து தோட்டங்களைக் கைப்பற்றிவிட்டது. தனியான் தோட்டத்தில் எமது சங்கம் தொண்டமான் சங்கத்தை முறியடித்துவிட்டது. அங்கு சமசமாஜ சங்கம் நாற்பது அங்கத்தவர்களை மட்டும் கொண்டிருந்தது. இத் தோட்டத்து தொழிலாளர்கள் அனைவரும் 35 நாட்கள் வேலைநிறுத்தம் செய்தனர். போராட்டம் வெற்றியை ஈட்டியது. சகல கோரிக்கைகளையும் வென்ற தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து வெற்றிவிழா கொண்டாடினர். தொண்டமானும் விழா மேடையில் தொண்டமானுக்கு மாலைபோட வந்த வால்பிடி ''எமது தமிழ் தலைவர் நீடுழி வாழ்க!'' என கத்தினார். செங்கொடிச் சங்கத்தின் தலைவரான ரொசாரியோ பெர்னாண்டோவுக்கு மாலையிட்ட தோழரின் கோஷம் ''எமது புரட்சிகர தலைவர் நீடுழி வாழ்க'' என ஒலித்தது.

இன்னுமொரு சம்பவத்தை நோக்குவோம். அண்மையில் அப்புத்தளைப் பகுதியில் இதகல் வுக்கு வந்திருந்தார். எமது சங்கத்தின் சார்பில் உப-தலைவர் ரொசாரியோ சமூகமளித்தார். இத் தோட்டத்தில் செங்கொடிச் சங்கமே பலமுள்ளதாயிருந்ததால், தொண்டமான் அடுத்தடுத்த தோட்டங்களிலிருந்து தனது ஆட்களைக் கொண்டு வந்தார், வெற்றி விழாக் கொண்டாட. ஆயினும், தொண்டமான் தோழர் ரொசாரியோவுடன் சேர்ந்து, எங்கும் பரவியுள்ள செங்கொடியின் கீழ்தான் ஊர்வலத்தில் வரவேண்டியிருந்தது. காங்கிரஸ் கொடி ஒன்றுமே காணப்படவில்லை. வேறு ஒரு பேர் வழி ஓடோடிச் சென்று இந்திய மூவர்ணக் கொடியைக் கொண்டு வந்தார். உடனே எமது தோழர்கள் கொதித்தெழுந்து இந்திய கொடிக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். ''உனக்கு வேண்டுமானல் போய் ஒரு இலங்கை கொடியைக் கொண்டு வா. இந்திய கொடியை தூக்க விடமாட்டோம்'' என்று செங்கொடிச் சங்கத் தோழர்கள் கோஷித்தனர். வேறு வழியின்றி மூவர்ணைக் கொடியைச் சுருட்டி வைத்தனர் தொண்டமான் கூட்டத்தினர்.

### பொலிஸ் துப்பாக்கிக்கு துணிச்சலுடன் நெஞ்சைக் காட்டினர்.

இவ்வாறு மூக்குடைபட்டதுடன் விட்டார்களா? புரட்சிகர கோஷங்களை எழுப்ப வேண்டாமென கட்டளை பிறப்பிக்க முன்வந்தனர் இ. தொ. கா. மாவட்ட தலைவர்கள். ஆனால், முகத்தில் அறைந்தாற் போல் இவர்களுக்குப் பதில் கிடைத்தது. எமது கோஷங்களைப் பற்றி கவலை கொள்ளவோ கட்டளை பிறப்பிக்கவோ நீங்கள் யார் என எமது தோழர்கள் குமுறினர்கள்.

அன்று அவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட வாக்குரிமை அவர்களிடையே ஒரு புரட்சிகர உணர்வை ஏற்படுத்தியது.

**நமது அரசியல் நிருபர்**

இந்த வகையில் யு. என். பி. நமக்கு ஒரு நன்மையைத்தான் செய்தது என கூறலாம். வாக்குரிமை பறிக்கப்பட்ட தொழிலாளர்களை என். எம். பெரேரா திரிபுவாதக் கும்பல் எட்டியும் பார்க்கவில்லை. வாக்குரிமை இல்லாத அவர்களால் பாராளுமன்றத்திற்கு பிரயோசனமில்லை என கருதிவிட்டனர். இவர்களுக்கு வேண்டியது மக்களல்ல; வாக்குத்தான்.

தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை பாராளுமன்றப் பாதை வெறும் படுகுழிப் பரிதை என நிருபிக்க வேண்டிய அவசியமே இல்லை.

சேனு தோட்டத்தில் நீண்ட வேலைநிறுத்தம் நடைபெற்றது. சில கோரிக்கைகளை வென்றெடுத்தபின், வேலை நிறுத்தத்தை முடிக்க எண்ணிய தொழிலாளர் ஒரு நிபந்தனையைப் போட்டனர். அதாவது செங்கொடிச் சங்கத் தலைவர்கள் தோட்டத்துக்குள்ளே வந்து கூட்டத்தில் பேசி வேலை நிறுத்த முடிவுபற்றி விளக்க வேண்டுமென்பதே அந்த நிபந்தனை. இதன் தலைவர்கள் பெரும் ஊர்வலமாக கூட்டம் நடாத்தும் இடத்தை நோக்கிச் சென்றனர். பொலிஸ் படையினர் ஊர்வலத்தை தடுத்து நிறுத்த முயன்றனர். ஆனால், தொழிலாளர்கள் தீவிரமாக நின்றனர். பொலிஸார் துப்பாக்கியை நீட்டிப் பயமுறுத்தியபோது எமது மாவட்டப் பிரதிநிதி தனது நெஞ்சை முன்னே நீட்டி துணிவிருந்தால் சுடும்படி சவால் விட்டார். பொலிஸாரும் பின் வாங்கினர். ஊர்வலமும் கூட்டமும் வெற்றிகரமாக நடந்தன. ஏன், 1967ல் அட்டனில் நடந்த சிறந்த மாபெரும் கூட்

6-ம் பக்கம் பார்க்க

# புரட்சியை இறுதிவரை இட்டு

**பர்மா கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் தோழர் தாக்கின் தான்துன், படுகொலை செய்யப்பட்டதையொட்டி, பர்மிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி "நீவின் தாக்குதல்களை எமது தாக்குதல்கள் மூலம் நிர்மூலமாக்குவோம் படுதுரோகியும், அமெரிக்காவின் அடிவருடியும், பாசிஸ இராணுவ சர்வாதிகாரியுமான நீவின் ஒழிக! மக்கள் ஜனநாயகம் சமஷ்டி குடியரசு ஒன்றை உருவாக்குவோம்! புரட்சியை இறுதிவரை முன்னெடுத்துச் செல்வோம்!" என்ற தலைப்பில் வெளியிட்ட அறிக்கையை இங்கு பிரசுரிக்கின்றோம்.**

**-- ஆசிரியர்**

கம்யூனிஸ்டுகளையும் மக்களையும் சிறுபான்மை தேசிய இனங்களையும் கொன்று குவித்து வரும் நீவின், கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக பிற்போக்கு உள்நாட்டு யுத்தம் ஒன்றை நடத்தியுள்ளான். கடந்த இருபது வருடங்களில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் நீவினல் கொலை செய்யப்பட்டுள்ளனர். பெண்கள் பலர் கற்பழிக்கப்பட்டுள்ளனர். கிராமங்கள் பல சூறையாடப்பட்டுள்ளன; எரிக்கப்பட்டுள்ளன; நிர்மூலமாக்கப்பட்டுள்ளன. நீவின் ஆயுதப் படைகளின் உதவியுடன் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் ஓர் இராணுவ பாசிஸ சர்வாதிகார ஆட்சியை நிறுவியுள்ளான். நீவின் ஆட்சி பீடத்தில் அமர்ந்த உடனே ரங்கூனில் நூற்றுக்கு மேலான மாணவர்கள் அவனல் கொல்லப்பட்டுள்ளனர். அரக்கான்ஸ் இன மக்கள் அக்கியாப் நகரில் அரிசி வேண்டும் என கேட்டதற்காக சுட்டுக் கொல்லப்பட்டனர். பர்மாவிலுள்ள நூற்றுக்கணக்கான சீன மக்களையும் படுகொலை செய்தனர். நீவின் படுபாதகமான ஒரு கொலைகாரன்.

### நீவின் ஒரு படு துரோகி

நீவின் பாசிஸ இராணுவ கும்பல் ஏகபோகம் நடத்துவதற்கும் சுரண்டுவதற்குமாக நாட்டின் பொருளாதார நிறுவனங்கள் முழுவதையும் கைப்பற்றியுள்ளனர். இந்த இராணுவ கும்பல் தேசிய மயமென்ற போர்வையின்கீழ் ஏகபோகம், சுரண்டல் ஆகியவற்றின் நலன்களைப் பாதுகாப்பதற்காக அண்மையில் சகல தனியார்துறை கைத்தொழில் நிறுவனங்களையும் பறிமுதல் செய்ததோடு சகல கமத்தொழில் உற்பத்திகள், கடல் தொழில் உற்பத்திகள், சுரங்கங்கள், போக்குவரத்து, வர்த்தகம் ஆகியவற்றையும் கைப்பற்றியுள்ளனர். இவை யாவும் அவர்களுக்கு திருப்தி அளிக்கவில்லை. நாட்டின் பொருளாதாரத்தை ஏகபோகமாக்கிக் கொள்வதற்கும் மக்களைச் சுரண்டுவதற்குமாக அமெரிக்க, ஜப்பானிய, மேற்கு ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகளுடன் சேர்ந்து நாட்டை விற்றுள்ளனர். நீவின் ஒரு படு துரோகியாவான்.

ஏகாதிபத்திய அமைப்பு முறையையும், நிலப்பிரபுத்துவ அமைப்பு முறையையும் ஒரு புதிய முறையில் பேணிப் பாதுகாக்கும் நீவினின் அதிகாரத்துவ மூலதன ஆட்சியினல் நாடு முழுவதிலுமுள்ள மக்கள் பட்டினியால் இறக்கின்றனர். பல்லாயிரக்கணக்கானேர் வேலையில்லாது திண்டாடுகின்றனர். நீவின் இராணுவக் கும்பல் மிகப் பெரும் சுரண்டல்காரரைக் கொண்ட கும்பலாகும்.

### பர்மிய மக்களின் புரட்சிகர போராட்டம்

தமது மிருகத்தனமான பாசிஸ—இராணுவ சர்வாதிகார ஆட்சியையும் ஏகபோக சுரண்டலையும் மூடி மறைப்பதற்காக நீவின் பாசிஸவாதிகள் சோஷலிஸவாதிகளாக (அதாவது ''பர்மாவின் சோஷலிஸத் திட்டம்'') நாடகமாடுகின்றனர். மக்களை ஏமாற்றுவதற்காக தொழிலாளர் கவுன்சில்கள், விவசாயிகள் கவுன்சில்கள் என்ற போலி ஸ்தாபனங்களை உருவாக்கியுள்ளனர். மக்களை திரும்பவும் ஏமாற்றும் வீண் முயற்சியில் ''உள்நாட்டு ஐக்கியத்தை'' உருவாக்குவதற்காக பிற்போக்கு அரசியல்வாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு புதியதோர் அரசியல் திட்டத்தை அமைக்கப் போகின்றோம் என பம்மாத்துப் பண்ணுகின்றனர். நீவின் ஒரு நரிக்கள்ளன். வெறுக்கத்தக்க நச்சுப்பாம்பு.

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக நீவினல் நடத்தப்பட்ட பிற்போக்கு உள்நாட்டு யுத்தத்தை எதிர்த்து, பர்மிய மக்கள் பர்மிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் புரட்சிகரப் போராட்டத்தை நடாத்தியுள்ளனர். பர்மிய கம்யூனிஸ்ட் கட்சியினல் தலைமை தாங்கப்பட்ட

நீவின் பாசிஸவாதிகளின் போலி சோஷலிஸமும், அவர்களது போலி நடுநிலைமை வெளிநாட்டுக் கொள்கையும் இப்பொழுது அம்பலப்படுத்தப்பட்டுள்ளது. நாளுக்குநாள் நீவின் பாசிஸ கும்பல் தனிமைப்படுத்தப்படுகின்றனர். பலமுறை நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

இராணுவ பொருளாதார அரசியல் நெருக்கடிகளிலிருந்து தப்புவதற்காக நீவின் பல சூழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ளான். பர்மிய புரட்சியின் முது

### நீவினது ஏஜண்டுகள்

தலைவர் தாக்கின் தான் துன்னின் தலைமையின்கீழ் நீவினது ஏஜெண்டுகளான பாதின், கோடே, ஜானேவ், பாகெட் போன்ற திரிபுவாதிகளையும் எதிர்த்து, அவர்களை முறியடித்து, பர்மிய கம்யூனிஸ்ட் கட்சி பல அடிகளை முன்வைத்துள்ளது. எமது தாக்குதல்கள் மூலம் நீவினின் தாக்குதல்களை நிர்மூலமாக்கியுள்ளோம்: நீவினது ஏஜண்ட் துன்நைன், துன் ஷீன் திரிபுவாதக் கும்பலை நசுக்கிவிட்டோம். இந்த வேளை

## மக்கள் ஜனநாயக குடியரசை

தேசம் பரந்த புரட்சிகர யுத்தத்தில் எதிரிப் படைகள் சிறிது சிறிதாக முற்ருக ஒழிக்கப்பட்டு பெருமளவில் கிராமத்தளப் பிரதேசங்களில் மக்களின் கைக்கு அதிகாரம் வந்துள்ளது.

கெலும்பான பர்மிய கம்யூனிஸ்ட் கட்சியையும் அதன் தலைவரான தாக்கின் தான்துன் அவர்களையும் ஒழித்துக்கட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளான்.


யில் நீவினது வெளித்தாக்குதல்களையும் அவனுடைய உள் சீர்குலைவு வேலைகளையும் எதிர்நோக்க வேண்டியிருந்தது. நீவினது பாசிஸ தாக்குதல்களுக்கெதிராக நாம் நடத்திய தாக்குதலின்போது நீவினது ஏஜெண்டும் துன் நைனினது வால்பிடியுமான கைக்கூலிக் கொலைகாரன் மோங் மியாவினல் தலைவர் தாக்கின் தான் துன் படுகொலை செய்யப்பட்டார்.

## நீவின் பாசிஸ இராணுவ கும்

### போலி சோஷலிஸமும் போலி நடுநிலைமைக் கொள்கையும் அம்பலம்

பர்மா முழுவதிலும்—வடக்கிலிருந்து தெற்குவரை, மேற்கிலிருந்து கிழக்குவரை—பல தேசிய இனங்களால் ஆயுதந் தாங்கிய புரட்சிகரப் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. தொழிலாளர்கள், விவசாயிகள், நகரத்திலுள்ள வறியமக்கள், மாணவர்கள், சிறு வியாபாரிகள், சிறுமுதலாளிகள் ஆகியோர் நீவினது நியாயமற்ற அடக்குமுறையையும் சுரண்டலையும் எதிர்த்து வருகின்றனர். நீவின் பாசிஸவாதிகளுக்கெதிராக மக்கள் நாடு பூராவும் கிளர்ந்தெழுகின்றனர்.

அமெரிக்க, ஜப்பானிய, மேற்கு ஜெர்மன், சோவியத் ஏகாதிபத்தியவாதிகள் அளிக்கும் பெருமளவான இராணுவ, பொருளாதார உதவிகளின் துணையுடன் நீவின் பாசிஸவாதிகள் பல படைப் பிரிவுகளை நிறுவியுள்ள்னர். பர்மிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியின் தலைமை ஸ்தாபனத்தை இல்லாதொழிக்கும் முயற்சியில் அவை தொடர்ச்சியான பல தாக்குதல்களை நடாத்தியுள்ளன. இதே வேளையில் பர்மிய கம்யூனிஸ்ட் கட்சிக்குள் தமது ஏஜெண்டுகளை அனுப்புவதோடு கட்சியை உள்ளுக்குள்ளிருந்தே கறுவறுக்கும் நோக்கத்துடன் கட்சிக்குள் இருக்கும் ஊசலாடும் நபர்களை விலைகொடுத்து வாங்கியுள்ளனர்.



**பாசிஸ நீவின் ராணுவ ஆட்சியை எதிர்த்துப் போராடும் பர்மிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலுள்ள மக்கள் படை.**

தலைவர் தாக்கின் தான் துன்னின் தலைமையின்கீழ் பர்மிய கம்யூனிஸ்ட் கட்சி பர்மிய மக்களின் பரிபூரண விடுதலைக்காக கடந்த முப்பது வருடங்களாகப் போராடி வந்துள்ளது. பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கும் ஜப்பானிய பாசிஸத்திற்கும் எதிராக ஆயுதமேந்திய போராட்டத்தை அது நடத்தியுள்ளது. கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக, நீவினது அரசாங்கம் உட்பட அடுத்தடுத்து வந்த அதிகாரத்துவ மூலதன அரசாங்கங்களுக்கெதிராக தனது சொந்தப் பலத்தில் தங்கியிருந்து போராடியுள்ளது. இச் சகல போராட்டங்களும் பர்மிய மக்கள், உலகப் பாட்டாளி வர்க்கம், சகல நாடுகளிலுமுள்ள புரட்சிகர மக்கள் ஆகியோரது போராட்டத்திற்கு அளப்பரிய தொண்டாற்றியுள்ளது.

## பர்மிய கம்யூனிஸ்
## அறிக்கை

### கட்சித் தலைவரின் மரணம் ஒரு பேரிழப்பு

தலைவர் தாக்கின் தான் துன்னின் மரணம் பர்மிய மக்களின் பேரிழப்பு மட்டுமல்ல, உலகப் பாட்டாளி வர்க்கத்தினதும், சகல நாடுகளினதும் புரட்சிகர மக்களினதும் இழப்பாகும்.

பர்மாவில் வர்க்கப் போராட்டம் கூர்மையடைந்து விட்டதென்பதையும், புரட்சி

# ...ட்டுச் செல்வோம்!

மேலும் அபிவிருத்தி அடைந்து விட்டதென்பதையும், வெற்றி நெருங்கிக் கொண்டிருக்கின்ற தென்பதையும்தான் தலைவர் தாக்கின் தான் துன்னின் மரணம் எடுத்துக் காட்டுகிறது. பர்மிய மக்கள் அனைவரையும், உலகப் பாட்டாளி வர்க்கத்தினரையும், சகல நாடுகளிலுமுள்ள புரட்சிகர மக்களையும் தூண்டும் சக்தியாக தலைவர் தாக்கின் தான் துன்னின் மரணம் அமைந்துள்ளது. ஏகாதிபத்தியம், பிற்போக்கு ஆட்சியாளர்கள், திரிபுவாதிகள் ஆகியோருக்கு எதிரான விட்டுக்

வெற்றியும் ஈட்டியுள்ளனர். நீவினது அகங்காரத்திற்குஇராணுவ சக்தி மூலம் பலத்த அடியைக் கொடுத்துள்ளனர்.

புரட்சிகர மக்களைப் பொறுத்தவரை உள்நாட்டு நிலைமையும், சர்வதேச நிலைமையும் வெகு சிறப்பாக உள்ளன.

### நீவின் பாசிஸக் கும்பல் அழிக்கப் படுவது திண்ணம்

நாட்டின் பொருளாதார அரசியல் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நீவின் பாசிஸ வாதி

# ...ரசை நிறுவுவோம்!

கொடுக்காத — சளைக்காத சரியான போராட்ட பாதையை தலைவர் தாக்கின் தான் துன் காட்டியுள்ளார். அவர் காட்டிய பாதை புரட்சிக்காக சொந்த உயிரையே அர்ப்பணம் செய்யும் பாதையாகும். புரட்

கள் சக்தியற்றவர்கள். நாட்டை அவர்கள் விற்று விட்டனர். நீவின் நாட்டை அமெரிக்கர்களுக்கு விற்றுவிட்டு, ஏகாதிபத்தியவாதிகளின் உதவியுடன் தனது படைப்பலத்தைப் பெருக்கிக் கொண்

ரான உப - தலைவர் தாக்கின் பா தீன்தின், உப - தலைவர் தாக்கின் ஷின் போன்றோரைக் கொண்ட ஒரு முன்னணிப் படையை பர்மியக் கம்யூனிஸ்ட் கட்சி கொண்டுள்ளது. வளர்ச்சியடைந்த ஊழியர்கள், கட்சி அங்கத்தினர்கள் ஆகியோரையும் அக் கட்சி கொண்டுள்ளது.

பர்மிய கம்யூனிஸ்ட் கட்சி தனது நேரடியான, தலைமையின் கீழ் ஒரு மக்கள் படையையும் கொண்டுள்ளது.

வளர்ந்துவரும் சக்திகளான வாலிபர், இளம் பெண்கள் ஆகியோருடனும் வெகுஜனங்களுடனும் பர்மிய கம்யூனிஸ்ட் கட்சி ஐக்கியப்பட்டுள்ளது. விவசாயிகள் மத்தியில் அசைக்க முயாதபடி வேரூன்றியுள்ளது.

தனது நேச சக்திகளுடனும் புரட்சிகர தேசிய சிறுபான்மை இனங்களுடனும் சேர்ந்து ஒரு ஐக்கிய முன்னணியை பர்மிய கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கி

# ...கும்பலை தூக்கி எறிவோம்!

சினை இறுதி வெற்றிவரை எடுத்துச் செல்லும் பாதையாகும்.

### இரட்டைச் சகோதரர்கள்

பர்மிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியின் தலைமை ஸ்தாபனத்தை தாக்கியதை இட்டும் தலைவர் தாக்கின் தான் துன்னை படுகொலை செய்ததனுலும் ஏற்பட்ட அரைகுறை வெற்றியையிட்டு

டான். புரட்சிகர சக்திகளுக்கெதிராக பெருமளவில் தாக்குதல் நடத்துவதற்கு அவற்றை அவன் பயன்படுத்தியுள்ளான். அவனது ஜீவமரணப் போராட்டத்தைத்தான் இது வெளிப்படுத்துகின்றது.

நீவின் பாசிஸ இராணுவ சர்வாதிகார கும்பலை மக்கள் அழிக்கும் நாள் வெகு தூரத்திலில்லை. நீவினும் தனது முன்னைநாள் எஜமானர்களான ஜப்பானிய பாசிஸ வாதிகளைப் போல் அழித்தொழிக்கப் படுவது திண்ணம்.

தலைவர் தாக்கின் தான்துன்னினுல் கட்டி வளர்க்கப்பட்டு தலைமை தாங்கப்பட்ட பர்மிய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸம் - லெனினிஸம் - மாசேதுங் சிந்தனையை இறுகப்பற்றிக் கொள்கிறது. தலைவர் தாக்கின் தான் துன் காட்டிய பாதையில் அது தொடர்ந்து செல்லும். நாடெங்கிலுமுள்ள மக்களுடன் இணைந்து கட்சியின் உறுப்பினர்கள் வெற்றி மேல் வெற்றி ஈட்டி முன்னேறிச் செல்கின்றனர். வெற்றிக்கு ஸ்திரமான அத்திவாரத்தை கட்சி இட்டுள்ளது.

பர்மிய மக்களின் விடுதலைக்காக தலைவர் தாக்கின் தான் துன்னுல் கட்டி எழுப்பப்பட்டு தலைமை தாங்கப்பட்ட பர்மிய கம்யூனிஸ்ட் கட்சி கடந்த முப்பது வருடங்களாக அது நடத்திய போராட்டங்களின் போது மார்க்சிஸம் - லெனினிஸம் - மாசேதுங் சிந்தனையை பர்மிய புரட்சிகர நடைமுறையுடன் ஒன்றிணைத்த தோடல்லாமல் சரியான திட்டத்தையும், நெறியையும், கொள்கையையும் வகுத்துள்ளது.

### மக்கள் படை

தலைவர் தங்கின் தான் துன்னின் இணைபிரியாத நண்ப

யுள்ளது. தேசிய, ஜனநாயக ஐக்கிய முன்னணியே அதுவாகும்.

உலகப் பாட்டாளி வர்க்கம், சகல நாடுகளிலும் உள்ள புரட்சிகர மக்கள், குறிப்பாக சீனத்தின் 70 கோடி மக்கள் ஆகியோரது பூரண ஆதரவு பர்மிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு உண்டு. உலகப் பாட்டாளி வர்க்கத்தின் தலைவரான தோழர் மாஓவின் வழி காட்டலும் எமக்கு உண்டு.

எனவே, தலைவர் தாக்கின் தான் துன் தனது உயிரை அர்ப்பணித்துள்ள போதிலும் பர்மிய கம்யூனிஸ்ட் கட்சி பர்மிய புரட்சியை இறுதி வெற்றிக்கு இட்டுச் செல்வது திண்ணம்.

தோழர்களே, தொழிலாளர்களே, விவசாயிகளே, நகரத்து வறிய மக்களே, மாணவர்களே, வாலிபர்களே, அரசாங்க ஊழியர்களே, புத்திஜீவிகளே, கைத்தொழிலாளர்களே, வியாபாரிகளே, புரட்சிகர தேசிய சிறுபான்மை இனமக்களே!

### கம்யூனிஸ்ட் கட்சியின் சபதம்

தலைவர் தாக்கின் தான்துன்னின் வழிகாட்டலின் கீழ் வகுக்கப்பட்ட கொள்கைகளைப் பின்பற்றி பர்மிய கம்யூனிஸ்ட் கட்சி மக்களுடன் சேர்ந்து படுதுரோகியும் அமெரிக்க வால்பிடியும், பாசிஸ இராணுவ சர்வாதிகாரியுமான நீவினை தூக்கி எறிவது திண்ணம். அவன் அமெரிக்க உதவியுடன் கட்டவிழ்த்து விட்டுள்ள தாக்குதல் நமது தாக்

7-ம் பக்கம் பார்க்க

## ...யூனிஸ்ட் கட்சி ...றிக்கை

பாசிஸ இராணுவ சர்வாதிகாரி நீவின் சிறிது பூரிப்படைந்துள்ளான்போல் தெரிகிறது. புரட்சிகர சக்திகளை இராணுவத்தின்மூலம் ஒழித்துக்கட்டுவதற்கும்—ஏமாற்றின் மூலம் அதனை சீரழியச் செய்வதற்கும் நீவின் பகிரதப் பிரயத்தனம் எடுக்கின்றுன்.

இச் சூழ்நிலையில் கட்சியும், புரட்சிகர மக்களும் பல கஷ்டங்களை எதிர்நோக்குவது இயற்கையே. ''வெற்றியும், கஷ்டங்களும் இரட்டைச் சகோதரர்கள். வெற்றி பெரிதாய் இருக்கும்போது, அனுபவிக்க வேண்டிய கஷ்டங்கள் மிகவும் மோசமானவை'' என தலைவர் தாக்கின் தான் துன் கற்பித்துள்ளார்.

பல கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ள இக் காலகட்டத்தில் பர்மிய கம்யூனிஸ்ட் கட்சியின் கீழுள்ள மக்கள் படையும் மக்களும் நீவினது தாக்குதல்களை தமது சொந்த தாக்குதல்கள் மூலம் முறியடிப்பதற்கு முயற்சி எடுப்பதோடு, வெற்றிமேல்

---

## புத்தகம் படிப்போம்

# தாராள வாதத்தை எதிர்ப்போம்

### தலைவர் மா சேதுங்

நாம் ஊக்கமான சித்தாந்தப் போராட்டத்திற்காக நிற்கிறோம். காரணம் அது நமது போராட்டத்திற்கு உதவியாக, கட்சிக்குள்ளும் புரட்சிகர ஸ்தாபனங்களுக்குள்ளும் ஐக்கியத்தை உருவாக்கும் ஒரு ஆயுதமாக விளங்குகின்றது. ஒவ்வொரு கம்யூனிஸ்டும் ஒவ்வொரு புரட்சிவாதியும் இந்த ஆயுதத்தைக் கையில் எடுத்துக் கொள்ளல் வேண்டும்.

ஆனல், தாராளவாதம், சித்தாந்தப் போராட்டத்தை நிராகரித்து, கோட்பாடு அற்ற சமாதானத்திற்காக நிற்கிறது; இதன் விளைவாக உளுத்துப் போன பண்பற்ற மனோபாவம் தோன்றி கட்சியிலும், புரட்சிகர ஸ்தாபனங்களிலுமுள்ள சில பிரிவுகளையும் தனிநபர்களையும் அரசியல் ரீதியில் சீர்குலைக்கின்றது.

தாராளவாதம் பல்வேறு வழிகளில் வெளிப்படுகின்றது.

ஒருவர் தவறிழைத்து விட்டார் என்பது தெளிவான போதும், நீண்ட காலம் பழகியவர், சக ஊரவர், ஒரே பாடசாலையில் படித்தவர், நெருங்கிய நண்பர், அன்பிற்குரியவர், பழைய கூட்டாளி அல்லது பழைய கீழ்ப்பணியாளர் என்ற காரணத்தால், அவருடன், கோட்பாட்டு ரீதியில் வாதிடுவதற்கு மாருக, சமாதானத்திற்காகவும், நட்புறவுக்காகவும், விஷயங்களை நழுவ விடுவது; அல்லது நல்ல உறவுகளை வைத்திருப்பதற்காக விஷயங்களுக்குப் பூரணமான தீர்வு காண்பதற்குப் பதில், அவற்றை இலேசாக தொட்டுவிட்டு விடுவது. இதன் விளைவாக ஸ்தாபனத்திற்கும் தனி நபருக்கும் தீங்கு விளைவிக்கப்படுகின்றது. இது தாராளவாதத்தின் முதலாவது வகை.

ஸ்தாபனத்திற்குத் தனது யோசனைகளை ஊக்கமாய் முன்வைப்பதற்குப் பதிலாக, முதுகுக்குப் பின் பொறுப்பற்ற விமர்சனத்தில் ஈடுபடுவது; மக்களின் முகத்துக்கு முன் ஒன்றும் சொல்லாமல் அவர்களுடைய முதுகுக்குப் பின் வம்பளப்பது; கூட்டத்தில் ஒன்றும் பேசாமல் அது முடிந்த பின் வம்பளப்பது; கூட்டுறவு வாழ்வுக் கோட்பாடுகளை உதாசீனம் செய்து, தனது சொந்த மனப்போக்கைத் பின்பற்றுவது. இது இரண்டாவது வகை.

விஷயங்கள் தன்னை நேரடியாகப் பாதிக்காவிட்டால், அவற்றை நழுவிச் செல்ல விடுவது; ஒரு விஷயம் தவறு என்பதைப் பூரணமாகத் தெரிந்தும், அது பற்றி இயன்ற அளவு சொற்பமாகப் பேசுவது; குறைகூறப்படாமல் தப்புவதற்காக ஆபத்து இல்லாத முறையில் பாதுகாப்பாய் உலகமறிந்தவர் போல் நடந்து கொள்வது. இது மூன்ருவது வகை.

கட்டளைகளுக்குப் பணிந்து ஒழுகாமல் தமது சொந்த அபிப்பிராயங்களுக்கு மேன்மையான ஸ்தானம் கொடுப்பது, ஸ்தாபனத்திடமிருந்து விசேஷ சலுகை கோரும் அதே வேளையில் அதன் கட்டுப்பாட்டை நிராகரிப்பது. இது நான்காவது வகை.

ஐக்கியத்திற்காக அல்லது முன்னேற்றத்திற்காக அல்லது வேலையை நன்ருய் செய்தவற்காக அல்ல, பதிலுக்கு தனிப்பட்ட தாக்குதல் கொடுப்பதற்காக, சண்டைகள் பிடிப்பதற்காக, சொந்த மனஸ்தாபங்களைக் கொட்டித் தீர்ப்பதற்காக, அல்லது பழிவாங்குவதற்காக தவருன கருத்துக்களுக்கு எதிரான போராட்டத்திலும், விவாதத்திலும் ஈடுபடுவது. இது ஐந்தாவது வகை.

தவருன கருருத்துக்களை மறுத்துரைக்காமல் கேட்பது, எதிர்ப்புரட்சி வாதிகளின் குறிப்புரைகளை அறிவிக்காமல் கேட்பது. ஆனல், மாருக ஒன்றும் நடக்காதது போல் அவற்றை அமைதியாக எடுத்துக் கொள்வது. இது ஆருவது வகை.

மக்கள் மத்தியிலிருந்தும் பிரசாரம் செய்யாமலும் ஊக்கமூட்டாமலும் இருப்பது; அல்லது சொற்பொழிவுகள் ஆற்ருமல் அல்லது அவர்கள் மத்தியில் பரிசீலனைகளும், விசாரணைகளும் நடத்தாமல் இருப்பது; மக்கள் மீது பாராமுகமாகவும், அவர்கள் நல்வாழ்வில் அக்கறையில்லாமலும், தான் ஒரு கம்யூனிஸ்ட் என்பதை மறந்து, ஒரு சாதாரண ஆள் போல் நடந்து கொள்வது. இது ஏழாவது வகை.

— தொடரும்

## உலக வலம்

உஸ்மான்

# அல்பத்தாஹ்வுக்கு ஆதரவு பெருகுகிறது

## பாலஸ்தீன் விடுதலைப் போராட்டத்தை சோவியத் ஆளும் கும்பல் அமெரிக்காவுடன் சேர்ந்து காட்டிக் கொடுக்கிறது

சமீபகாலமாக மேனாட்டு பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் பார்க்கும் பொழுது அவற்றில் அல்பத்தாஹ் என்ற பாலஸ்தீனிய தேசிய விடுதலை முன்னனிபற்றிய செய்திகளும், கட்டுரைகளும் அதிக அதிகமாக இடம்பெறக் காணலாம். நாம் அடிக்கடி இப்பத்தியில் எழுதியிருப்பது போல இன்று ஏகாதிபத்திய செல்லப் பிள்ளையான இஸ்ரேல் யாருக்காவது பயப்படுகிறது என்றால் அது பாலஸ்தீனிய ஃபெடயீன்களுக்குத்தான்.

அராபிய அரசியல் தலைவர்கள் ஐ. நா. ஸ்தாபனத்தையும், சோவியத் யூனியனையும் நம்பி நட்டாற்றிலே கைவிடப்பட்டுள்ள - ஏமாற்றப்பட்டுள்ள - நிலையிலே இஸ்ரேல் அவர்களை எள்ளளவேனும் மதிப்பதில்லை. சம்பிரதாய பூர்வமான படைபலப் பரீட்சையில் இஸ்ரேல் வென்று விடும் என்பது சோவியத் யூனியனே மெதுவாகக் கூறிக்கொள்ளும் கசப்பான உண்மை. ஆனால், பாலஸ்தீனிய விடுதலை இயக்க முன்னணியான அல்பத்தாஹ் கொரிலாக்கள் என்றால் இஸ்ரேலியர்கள் மரியாதையுடனேயே கதைக்கின்றனர். உண்மையில் உலகிலுள்ள பிற கொரில்லாப் போர்வீரர்களைப் போலவே அல்பத்தாஹ் வீரரும் படைபலத்தை மட்டும் நம்பியிருப்பவர்அல்லர். கொள்கைப்பற்றும் அரசியல் தெளிவும் இருப்பதால் தான் ஏகாதிபத்தியத்தை மாத்திரமல்லாது திரிபுவாதத்தையும் இனங்கண்டு உண்மையான எதிரிகள் யார், நண்பர்கள் யார் என்பதை அறிந்து கொண்டிருக்கிறார்கள்.

சென்ற வாரம் அல்பத்தாஹ் ஸ்தாபனத்தின் வானொலியில் ஒலிபரப்பப்பட்ட ஒரு செய்தி விளக்கத்தில் இது தெளிவாகியது. பாலஸ்தீனியப் புரட்சியாளரை அடக்கவும் ஒழித்துக் கட்டவும் ஏகாதிபத்தியவாதிகள் மேற்கொள்ளும் முயற்சிகளை முறியடிக்க உறுதி பூண்டுள்ள பா. தே. வி. இயக்கம் மத்திய கிழக்குப் பிரச்சினைக்கு "சமாதான தீர்வு" காணலாம் என்னும் சோவியத் திரிபுவாதக் கூற்றையும் சந்தேகத்திற்கு இடமின்றி நிராகரித்தது. நான்கு வல்லரசுகள் மத்திய கிழக்குப்பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்தி வருவது யாவருமறிந்ததே. அமெரிக்காவும், திரிபுவாத சோவியத் யூனியனும் வழக்கம் போல இவ்விஷயத்திலும் கைகோர்த்துச் செயலாற்றி வருகின்றன. நியூயோர்க் நகரத்தில் "வல்லரசுகள்" மக்களது சுதந்திரத்தையும், சுய நிர்ணய உரிமைகளையும், பிற உரிமைகளையும் பேரம்பேசி வருகின்றனர். இந்நிலையில் அல்பத்தாஹ் வானொலி கூறியதாவது:

"பாலஸ்தீனிய கொரில்லாக்களின் வீரமிக்க செயல்களையும், பாலஸ்தீனியப் புரட்சிகளையும் அடக்கி ஒடுக்குவதற்கு "சமாதானத் தீர்வு" ஒன்றைக் காண ஏகாதிபத்திய நாடுகள் திரைமறைவில் பேரம் பேசுகின்றன. இவ்வியக்கம் நாளுக்கு நாள் அராபிய மக்களின் ஆதரவு பெறுவது கண்டு ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களுக்குச் சரணடைவோரும் அஞ்சுகின்றனர். ஆனால், அராபிய மக்கள் ஏமாறமாட்டார்கள்,

ஏகாதிபத்தியம், சியோனிஸம் ஆகியவற்றிற்கு எதிரான போராட்டத்தில் அராபிய மக்கள் பெரும் பங்கு வகித்துள்ளனர். தமது எதிர்காலத்தைஅவர்கள் தாமே ஆக்கிக்கொள்ளும் உரிமை படைத்தவர்கள். பிற்போக்கு சக்திகள் தமது புரட்சியைத் தடைப்படுத்தவோ, தாமதப்படுத்தவோ அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். தமது சுய சக்தியில் நம்பிக்கை கொண்டு ஆயுதம் தாங்கிய போர்ராட்டமே சரியானது என அவர்கள் முற்றாக உணர்ந்திருக்கின்றனர். எமது புரட்சி இறுதியில் வெற்றியடையும்."

மேற்படி கூற்றில் சோவியத் திரிபுவாதிகள் ஏகாதிபத்தியத்திற்குச் சரணாகதியடைபவர்கள் என்று குறிப்பிட்டுள்ளது கவனிக்கத்தக்கது. அல்பத்தாஹ் இயக்கத்தினர் திரிபுவாத சோவியத் கொள்கையை இனங்கண்டு கொள்வதற்கு திரிபுவாதிகள் செயல்களே காரணம். சமீபத்தில் எகிப்திலுள்ள சோவியத் திரிபுவாத தூதுவர் எகிப்திய தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்திய போது எகிப்திய ராணுவத்திற்கு கொடுக்கப்படும் ரஷ்ய தளவாடங்கள் கொரில்லாக்களுக்கு வழங்கப்படக்கூடாது என்று நிபந்தனை விதித்தாராம். கொரில்லாக்கள் கட்டுப்பாடின்றி இஸ்ரேலியரைத் தாக்குவார்கள் என்றும் அதனால் சமாதானத் தீர்வுக்கு குந்தகம் ஏற்படும் என்றும் அந்தத் தூதுவர் கூறினார். இதுதான் எதிர்ப் புரட்சி நடவடிக்கை.

இதையறிந்த பாலஸ்தீன விடுதலை இயக்க முன்னணியினர் மேலும்மேலும் தலைவர் மா சேதுங் காட்டும் மக்கள் யுத்தப் புரட்சிப் பாதையை நாடி நிற்கின்றனர்.

★

## இந்தியாவில் புதிய கம்யூனிஸ்ட் மா. லெ. கட்சி உதயம்

மா சேதுங் சிந்தனை வழி நிற்கும் புதியதொரு கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டதுடன் இந்தியப் புரட்சி ஒரு படி முன்னேறியுள்ளது. நக்ஸல்பாரிப் போராட்டத் தலைவர் தோழர் கனு சன்யால் தலைமையில் இயங்க ஆரம்பித்துள்ள இப் புரட்சிக் கட்சி கடந்த மேதினத்தன்று கல்கத்தாவில் மாபெரும் கூட்டமும், ஊர்வலமும் நடத்தி புரட்சிக் குரலை உலகறிய முரசறைந்துள்ளது.

இந்திய பூர்ஷ்வாக்களும், நவதிரிபுவாதிகளான நம்பூதிரிபாட், ஜோதிபாசு முதலியோரும், வீரமிகு இப் புரட்சியாளரை பல விதத்தில் அவதூறு செய்து வந்தபோதும், இன்று இந்தியாவில் பல இடங்களில் வெடித்துள்ள விவசாயிகளின் ஆயுதமேந்திய போராட்டத்துக்கு இப் புரட்சியாளர்களே தலைமை தாங்குகின்றனர். கேரளம், ஆந்திரம், உத்தரபிரதேசம், ஜம்மு, பீகார், நக்ஸல்பாரி முதலிய வெறுப்பு முதலியனவற்றை அரசாங்கமும் பிற்போக்குக் கட்சிகளும் கட்டவிழ்த்து விட்ட சூழ்நிலையிலும் புரட்சியாளர்கள் மா சே துங் நூல்கள், படங்கள் முதலியவற்றை கொண்டு சென்றனர். புரட்சியாளர்கள் நடாத்திய மே தினக் கூட்டத்தில் ஏராளமான பெண்களும், பல்கலைக்கழக மாணவர்களும் கலந்துகொண்டனர். புதிய கட்சிக்கு எங்கெங்கெல்லாம் ஆதரவு உண்டு என்பதை இது காட்டியுள்ளது. மாஓ சிந்தனைகளின் அடிப்படையில் புரட்சி நடத்துவோம் என்று தோழர் கனு சன்யால் கூறியுள்ளார்.

கேரளத்திலும், மேற்கு வங்காளத்திலும் நவ திரிபுவாதிகள் பதவி ஏற்றபோதும் அலட்சியமாக இருந்த மத்திய (பெரு முதலாளித்துவ) ஆட்சி புதியகள் இப்பொழுதுள்ள இந்திய அரசியல் சட்டத்திற்குள் அடங்குவார்கள் என்பதுதானே அர்த்தம். பூர்ஷ்வா அரசியல் அமைப்பில் ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் நாடகம் ஆடுவதுபோலவே நவதிரிபுவாதிகளும் "காங்கிரஸ் அல்லாத அரசாங்கம்" என்று கூறி தம்மையும் மக்களையும் ஏமாற்றி வந்துள்ளனர். தி. மு. கவும், சுதந்திராவும் காங்கிரஸ் "அல்லாத" கட்சிகள் தாம். ஆனால், படுபிற்போக்கு—ஏகாதிபத்திய தாசக் கட்சிகள். ஆகவே, காங்கிரஸ், காங்கிரஸ் அல்லாதது என்பதல்ல பிரச்சினை. எது வர்க்கம் என்பதே கவனிக்கப்பட வேண்டியது.

அந்த வகையில்புதிய புரட்சிக் கட்சி தோன்றியதும் ஆளும் வர்க்கம் தனது நலன் இடங்களில் நடக்கும் போராட்டங்கள் வேகம் பெற்று வருகின்றன. திரிபுவாதிகளின் ஆஷாடபூதித்தனத்தையும் இரட்டை வேஷத்தையும் புரட்சியாளர்கள் அம்பலப்படுத்தி வருகின்றனர்.

இதுகாலவரை அகில இந்திய இணைப்புக் கமிட்டி ஒன்றைக் கொண்டு இயங்கிய புரட்சியாளர்கள் இப்பொழுது கட்சியமைத்திருப்பது வளர்ச்சியைக் காட்டுகிறது. பச்சைப் படியான சீன எதிர்ப்பு, சீன புரட்சிக் கட்சி தோன்றியதும் தனது வர்க்க நலனைக் காட்டத் தொடங்கியுள்ளது.

நக்ஸல்பாரிகளைக் "கட்டுப்படுத்த" புதிய சட்டங்கள் இயற்ற வேண்டும் என்று மந்திரி சவாண் கூறியுள்ளார். அவர் கூற்று பல விஷயங்களை எமக்குக் காட்டுகிறது. இப்போதுள்ள சட்டதிட்டங்களுக்குள் நக்ஸல்பாரிகளை அடக்க முடியாது என்கிறார் சவாண். அப்படியானால், கேரளத்திலும், மேற்கு வங்காளத்திலும் உள்ள நவ திரிபுவாதிகளைப் பாதுகாக்க அடக்கு முறைகளை எடுக்க முன்வந்துள்ளது. அதனை புரட்சிகர பலாத்காரத்தினால் முறியடிப்பதே புரட்சியாளரது இலட்சியம். அதனையே தோழர் கனு சன்யால் "துப்பாக்கிக் குழல் மூலமாகவே அரசியல் அதிகாரம் பிறக்கிறது" என்ற மாஓ மேற்கோளைக் காட்டிக் கூறியுள்ளார். நக்ஸல்பாரிப் பொறி இந்தியா முழுவதும் பரவத் தொடங்கிவிட்டது என்பதை இனிமேலும் எவரும் சந்தேகிக்க இயலாது.

# பொது விரோதியான வெள்ளை ஏகாதி....

◎ 3-ம் பக்கத் தொடர்

டம் ஒக்டோபர் புரட்சியின் 50ம் ஆண்டு நிறைவு தினக் கூட்டமேயன்றி, வேறொன்றுமல்ல!

### போராட்ட நண்பர்கள்

இவை யாவும் குறிப்பது என்ன? இந்திய வம்சாவழித் தொழிலாளர்களுக்கும் சரியான புரட்சிகர வழியைக் காட்டினால் சிங்கள தொழிலாளி—விவசாயிகளுடன் தோளோடு தோள் நின்று போராடத் தகுந்த நண்பர்களாவர். இந்த உண்மையை நாம் நன்றாக மனதில் பதித்துக் கொண்டு சிங்கள தொழிலாளி—விவசாயிகளையும் இந்திய வம்சாவழித் தொழிலாளர்களையும் ஒன்றிணைக்கும் பணியில் ஈடுபட வேண்டும். எனவே, இல்லாத ஒரு தி. மு. க. வுக்கு எதிராக நடைபெறும் இயக்கம் உண்மையில் இலங்கை தொழிலாளி விவசாயி வர்க்கத்தினுள் பெரும் பிளவை உண்டாக்குவதற்கே என்பதை உணர்ந்து, இதனை நாம் முறியடிக்க வேண்டும்.

### உண்மையான எதிரி யார்?

இலங்கை மக்களின்—சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், ஆகிய சகலரினதும் உண்மையான எதிரி தி. மு. க. அல்ல. அந்நிய ஏகாதிபத்தியமும் அதன் உள்ளூர் நாய்களான பிற்போக்குவாதிகளுமே. ஆர். ஜி. சேனநாயக்கா போன்றோர் உண்மையான தேசியவாதிகளெனில், சகல அந்நிய சுரண்டல் பேர்வழிகளையும், உள்ளூர்ச் சுரண்டல் நரிகளையும் விரட்டியடிக்க முனைவாரா? அப்படியாயின் அவருக்கு முழு ஒத்துழைப்பையும் கொடுக்கத் தயாராயுள்ளோம். ஆனால், ஆர். ஜி. யிடமிருந்து இதை எதிர்பார்க்க முடியாது. வெறும் கோழைத்தனமாக, சிறிய எதிரிகள் மீதும், கானல் நீர்போன்ற இல்லாத எதிரிகள் மீதும் பாய்ச்சல் காட்டுகிறார். எனவே, எமது பொது எதிரிகளாகிய அந்நிய ஏகாதிபத்தியம் மற்றும் உள்நாட்டு முதலாளித்துவம், சுரண்டும் இந்திய வர்த்தகர்கள் ஆகிய இவர்களுக்கெதிராக சகல புரட்சிகர சக்திகளையும் அணிதிரட்டுவதை விட்டு கடலுக்கு அப்பால் கற்பனாபூர்வமான எதிரிகளைச் சுற்றி அலையவேண்டியதில்லை.

தி. மு. க. வைப் பொறுத்தவரை எமது கட்சி இரட்டை நாக்குடன் பேசவில்லை. இடத்துக்கு இடம் ஏற்ற வகையில் பேசி மக்களை ஏமாற்றவில்லை நாம். ஆனால், என். எம். பெரேராவோ எனில், ஒரு புறம் அண்ணாதுரையைப் பெரும் அரசியல்வாதி எனப் புகழ் பாடுகின்றார். மறுபுறத்தில் பாராளுமன்றத்தில் அண்ணாதுரைக்கு அனுதாபத் தீர்மானம் கொண்டு வருவதை எதிர்த்தார். திரிபுவாதி கெனமனும் இவருக்குக் குறைந்தவரல்லர். அவருடைய கழிசடைப் பத்திரிகையான "எத்த" தி. மு. க. வை திட்டிக் கொண்டிருக்கையில் கெனமனின் திரிபுவாதக் கட்சியின் யாழ் பிரதேச செயலாளரான திரு. வி. பொன்னம்பலம் அண்ணாதுரையின் அனுதாபக் கூட்டங்களில் பேசிக் கொண்டு திரிந்தார். அனுதாபத் தந்திகள் அடிப்பதில் திரிபுவாதிகளும் ட்றொட்ஸ்கியவாதிகளும் ஒருவரை ஒருவர் சளைக்கவில்லை. ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கம் என்ற பெயர்ப் பலகையை மட்டும் காவிக் கொண்டு திரியும் தலைவரான எஸ். நடேசன் மற்றும் சமசமாஜ கட்சியின் லங்கா தோட்டத் தொழிலாளர் சங்கச் செயலாளர் தருமலிங்கம் யாவரும் இத் தொண்டை நன்கு செய்தனர்.

நம்மைச் சுற்றி — நவம்

# சோரம்போன பேடிகளின் புலம்பல்

## இன்று திரிபுவாதிகள் நாறிக்கிடப்பது போல் வேறுயாரும் நாறிக்கிடக்கவில்லை

கெனமன் திரிபுவாதக் கும்பல் சென்ற வாரம் தனது ஏடுகளில் எமது கட்சியின் மேதின சம்பவங்கள் பற்றி வெட்கம், மானம், ரோஷம் இன்றி மூக்கால் அழுது மாரடித்துள்ளது.

ஏகாதிபத்தியத்திற்கு குடைபிடிக்கும் முதலாளித்துவ யூ. என். பி. ஆட்சியின் தடையையும், அதன் பொலிஸ் அடக்கு முறை—குண்டாந்தடியடிப் பிரயோகத்தையும் துச்சமெனக் கருதி மேதினத்தை மேதினத்தன்றே கொண்டாடி உலகப் பாட்டாளி வர்க்கத்தின் மகத்தான புரட்சிகர பாரம்பர்யத்தை செந்தினமாக கௌரவித்தது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் தலைமையின் கீழுள்ள வெகுஜன ஸ்தாபனங்களுமே.

ஆனால், கெனமன் திரிபுவாதக் கும்பலும், சமசமாஜவாதிகளும் இந் நாட்டிலுள்ள சகல பிற்போக்குவாதிகளுடன் ஐக்கியப்பட்டு—கைகோர்த்து இந்த நாட்டு தொழிலாளர் வர்க்கத்தை பேடித்தனமாகக் காட்டிக் கொடுத்தார்கள். ஆம், இவர்கள் மேதினத்தை ஏப்ரல் தினமாக கொண்டாடினர். அதே போது மேதினத்தை மேதினத்தன்றே கொண்டாடுவதற்கு—புரட்சிகர நடவடிக்கைகளில் ஈடுபட இலங்கை தொழிலாளர் வர்க்கத்திற்கும், சகல உழைக்கும் மக்களுக்கும் சரியான புரட்சிகரத் தலைமையை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி அளித்தது.

இந் நிகழ்ச்சி திரிபுவாதிகளால் தவறாக வழிநடத்தப் பட்டுள்ள நேர்மையுணர்வு படைத்த தொழிலர்ளர்கள் மத்தியிலும், திரிபுவாதிகளின் கட்சியிலுள்ள அங்கத்தவர்கள் மத்தியிலும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு முகம் கொடுக்க முடியாது ஆட்டங்கண்டு வரும் கெனமன் கும்பல் தனது அரசியல் வர்த்தகத்தைப் (பொருள் தேடுதல், சுரண்டல்தான் வேறென்ன) பாதுகாக்க கோழைத்தனமாகவும், கீழ்த் தரமாகவும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியையும், அதன் பொதுச் செயலாளர் தோழர் சண்முகதாசனையும் தனது ஊதுகுழல்கள் மூலம் நிந்தித்து அவதூறு செய்துள்ளது.

இத்தகைய கேடுகெட்ட சாக்கடை வாந்தியை திரிபுவாத நடைப்பிணங்கள் எடுப்பது இது முதல்தடவையல்ல. பல்வேறு விஷயங்களில் எமது கட்சியும், அதன் தலைமையும் எடுத்த சரியான தொழிலாளர் வர்க்க நிலையைத் தாக்கும் சீர்குலைவு வேலைகளில் இத் துரோகக் கும்பல் சகல பிற்போக்காளர்களுடனும் கைகோர்த்துள்ளது என்பது இந்நாட்டு மக்கள் அறிந்த பகிரங்க உண்மை.

மார்க்சிஸம்—லெனினிஸத்திற்கு படுதுரோகிகளாக உருவெடுத்து ஒரு சில பாராளுமன்ற ஆசனங்களுக்காக மடிப்பிச்சை எடுத்து சோரம் போகும் ஆண்மையற்ற பேடிகளான இத் திரிபுவாத கெனமன் கும்பல், தொழிலாளர் வர்க்க புரட்சிகர லட்சியங்களை போராட்டங்களை காட்டிக் கொடுத்து துரோகம் செய்ததைப் போலவே, உலக தொழிலாளர் வர்க்கத்தின் கீர்த்திமிக்க சர்வதேசிய செந்தினமான மேதினத்தை வெட்கம், மானம், ரோஷமின்றி ஏப்ரல் தினமாக்கி தமது தேர்தல் தெருக்கூத்தை நடத்தி மூக்கறு பட்டது; முகத்தில் கரியையும் பூசிக்கொண்டது. மே தினம் எனக்கூறி ஏப்ரல் தினத்தை பைலா நடனத்துடனும், கோமாளி வேசத்துடனும், வகுப்புவாத மசால்வடை கோஷத்துடனும், கை (தேர்தல்) சின்னத்துடனும், ஸ்ரீலங்கா, சமசமாஜ கட்சிகளுடன் இக் கும்பல் சேர்ந்து நடத்திய ஏப்ரல் தினத்தைப்பற்றி புரட்சிகர போதம் பெற்று வரும் தொழிலாளர் வர்க்கமும், வெகுஜனங்களும் அக்கறை காட்டவில்லை. அது ஒரு கேவலமான கேளிக்கையாக இருந்ததால் மக்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. எனவே, முதலாளித்துவப் பத்திரிகைகள் அதனை பெரிதாக விளம்பரப் படுத்தாமல் இருந்திருக்கலாம்.

ஆனல், எமது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மேதினத் தன்றே மேதினத்தைக் கொண்டாடியதுதான் மக்களின் கவனத்தை ஈர்த்தது. வெசாக் தினத்தில் மேதினத்தைக் கொண்டாடக் கூடாது என்ற பிற்போக்குவாதிகளின் வாதங்களுக்கெல்லாம் பதிலடி கொடுத்து, சமசமாஜிகளும், திரிபுவாதக் கும்பலும் மேதினத்தை மேதினத்தன்றே கொண்டாடாமல் கைவிட்டதை அம்பலப்படுத்தி மேதினத்தை மேதினத்தன்றே கொண்டாட வேண்டுமென்பதை விளக்கப் படுத்தியது எமது கட்சி. யூ. என். பி. யினதும் அதன் காவல்நாயான பொலிஸினதும் தடையை, அடக்கு முறையை மீறி ஊர்வலத்தையும், கூட்டத்தையும் நடத்தும் என உறுதி எடுத்தது. அதன் படி கொழும்பிலும். யாழ்ப்பாணத்திலும் பொலிஸ் தடையை மீறி ஊர்வலமும், கூட்டத்தையும் நடத்தியது. பொலிஸ் அடக்கு முறையைக் கையாண்டு ஊர்வலத்தினரை மிருகத்தனமாகத் தாக்கியது, பல தொழிலாளர்களை கைது செய்தது - இவை யெல்லாம் வெகுஜனங்களின் கவனத்தைப் பெற்றன. இவை யெல்லாம் சேர்ந்து பெரும் தாக்கத்தை நாட்டில் ஏற்படுத்தின. ஏகபோக முதலாளித்துவப் பத்தி பத்திரிகைகளால் கூட இவற்றை மறைக்கவோ புறக்கணிக்கவோ முடியவில்லை. எனவே மேதினத்தைப் பற்றி எமது கட்சியின் நிலையையும், மே தினத்தன்று நடந்த சம்பவங்கள் பற்றியும் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் முதலாளித்துவப் பத்திரிகைகளுக்கு ஏற்பட்டது.

இவை திரிபுவாதக் கும்பலுக்கு வயிற்றெரிச்சலை ஏற்படுத்தியுள்ளன. அதனுல் அவர்கள் தம் ஏடுகளில் ''ஏப்ரல் தினத்தை''ப் பற்றி யாரும் பேசுவாரில்லையே என மூக்கால் அழுது மாரடித்திருப்பதோடு, எமது கட்சியின் மேதினத்துக்கு முதலாளித்துவப் பத்திரிகைகள் வேண்டுமென்றே பிரசித்தம் கொடுத்துள்ளதாக ஒப்பாரி வைத்துள்ளனர். அத்துடன் எமது மேதினத்தை இழிவு (இதன்மூலம் உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் மகத்தான சர்வதேசிய தினமான மே தினத்தை) படுத்துகின்றனர்.

பொலிஸின் தடையையும்—அடக்குமுறையையும் மீறி ஊர்வலம் சென்ற தொழிலாளர் வர்க்கத்தின் துணிவை மதிக்க இத் திரிபுவாதிகளுக்கு இதயம் இல்லை. ஆனுல், மே முதலாம் திகதி காலையில் விஹாரமஹாதேவி பூங்காவில் தமது கையாட்கள் சிலரை அனுப்பியிருந்ததோடு, ஊர்வலம் புறப்பட்டதும், பார்க் வீதியிலுள்ள சோவியத் காட்சியறை அருகில் (சீன ஸ்தானிகராலயத்தின் அருகில் அல்ல) ஊர்வலத்தை கலைப்பதற்கு பொலிஸுக்கு ஒற்றர்களாகவும் வேலை செய்தனர். இந்தப் பேடிகள் இத்தனையும் செய்துவிட்டுபிற்போக்கு தமிழரசுக் கட்சியோடு எமது கட்சியை இணைத்துக்காட்டப் பார்க்கின்றனர். தமிழரசு கட்சி பற்றி எமது கட்சியின் நிலையும், கணிப்பீடும் இந்நாட்டு மக்கள் அறிந்ததே. தமிழரசுக் கட்சியின் பேச்சாளர்களோடு பொது மேடைகளில் தோன்றியுள்ளது — உறவாடுவது திரிபுவாத கெனமன் கும்பலே. நாம் அல்ல.

மே தினத்தை ''ஏப்ரல் தினமாக'' கொண்டாடாமல் மே தினத்தை மே தினத்தன்றே கொண்டாட எமது கட்சி தலைமை தாங்கியது சரியானதே. சகல பிற்போக்காளர்களும், திரிபுவாதிகளும், ட்ரொட்ஸ்கியவாதிகளும் இத் தினத்தின் முக்கியத்துவத்தை பலியிடும் வேளையில் இத் தினத்தின் சர்வதேசிய தன்மையை இலங்கை தொழிலாளர் வர்க்கம் உணர்ந்து செயல்பட வலியுறுத்தப்பட வேண்டியது கோட்பாட்டுப் பிரச்சினையாகும். இதை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சர்வதேசிய. உணர்வுடன் சரிவரச் செய்தது.

நவீன இல்லங்களிலும், மாடி வீடுகளிலும் உல்லாச போக வாழ்வு நடத்தும் திரிபுவாத தொழிலாளர் வர்க்க விரோதிகள், புரட்சிகர போதம் பெற்று வரும் தொழிலாளர் வர்க்கத்தினுலும், வெகுஜனங்களாலும் உதறித் தள்ளப் படுகிறுர்கள். இத் திரிபுவாத கெனமன் துரோகக் கும்பலின் அழிவு சமீபிக்கிறது. அழிவிலிருந்து இக் கும்பலை எந்த சக்தியும் தடுத்து விட முடியாது.

★

கெனமன் திரிபுவாத கும்பல் மேதின கூட்டம் என்ற பெயரில் 8ந் தேதி மட்டக்களப்பில் ஒரு எலக்ஸன் கூட்டத்தை நடத்தியது. ஆக மொத்தம் 150 பேர்களே கூடியிருந்த அக் கூட்டத்தில் பேசிய திரிபுவாதி கெனமன் தொழிலாளி வர்க்க லட்சியங்களையும், மே தினத்தின் முக்கியத்துவத்தையும் பற்றிப் பேசாமல் எலக்ஸன் பிரச்சாரம் நடத்திஞர். அவர் சிங்கள — தமிழ் மக்கள் மத்தியில் உண்மையான தேசிய ஐக்கியம் நிலவ வேண்டும் என்று கூறியிருக்கிறுர். ஆனுல் அவரது கட்சியின் ''எத்த'' பத்திரிகை எவ்வளவு தூரம் வகுப்புவாதப் பிரச்சாரத்தை நடத்தியது; நடத்தி வருகிறது என்பதும், தொழிலாளி வர்க்கத்திற்கிடையில் கூட வகுப்புத் துவேஷத்தைப் புகுத்திப் புல்லிய வேலை செய்து வருகிறது என்பதும் கெனமன் கும்பலினுல் மூடி மறைக்கக் கூடிய விஷயமல்ல. பாராளுமன்றச் சகதிக்குள் புகுந்து ஆசனங்களுக்காகவும், பட்டம் பதவிகளுக்காகவும் படு கேவலமான அரசியல் சந்தர்ப்பவாதிகளாக மாறிவிட்ட இந்த திரிபுவாதிகள் தேர்தல் நெருங்க நெருங்க வடக்கிலும் கிழக்கிலும் சென்று தேசிய ஐக்கியம் பேசத்தான் செய்வார்கள். ஆனுல் தெற்கிலும் மேற்கிலும் சிங்கள மக்களின் வோட்டுக்களைப் பொறுக்குவதற்ககா

8-ம் பக்கம் பார்க்க

## புரட்சியை இறுதி வரை இட்...

◎ 5-ம் பக்கத் தொடர்

குதல்கள் மூலம் தவிடுபொடியாக்கப்படுவதும் திண்ணம்.

தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் தொழிலாளி - விவசாயி ஒற்றுமையின் அடிப்படையில் தொழிலாளிகள், விவசாயிகள், சிறு முதலாளி வர்க்கத்தினர், தேசிய முதலாளிகள் மற்றும் புரட்சிகர தேசிய சிறுபான்மை இனங்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு மக்கள் ஜனநாயக சமஷ்டிக் குடியரசை நிறுவுவதற்காக பர்மிய கம்யூனிஸ்ட் கட்சி மக்களுடன் சேர்ந்து இறுதிவரை போராடும்.

பர்மிய மக்களினதும் ஏனைய உலக மக்களினதும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக பர்மிய கம்யூனிஸ்ட் கட்சி இறுதிவரை போராடும்.

மக்களின் விடுதலைக்காக தனது முழுவாழ்வையே அர்ப்பணித்து இறுதியில் தனது உயிரையே தியாகம் செய்த தலைவர் தாக்கிக்கின் தான் தூன் அவர்கள்காட்டிய பாதையை பின்பற்றுமாறு நாடுமுழுவதும் உள்ள மக்களுக்கு பர்மிய கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவல் விடுக்கின்றது. கம்யூனிஸ்ட் கட்சியுடன் சேர்ந்து நீவினின் பாசிஸ தாக்குதல்களை முறியடிக்குமாறும், நீவின் பாசிஸவாதிகளைத் தூக்கி எறிந்து விட்டு மக்கள் ஜனநாயக குடியரசு ஒன்றை உருவாக்கி புரட்சியை இறுதிவரை இட்டுச் செல்லுமாறும் பர்மிய கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவல் விடுக்கிறது.

யாழ்ப்பாணத்தில்

# பொலிஸ் தாக்குதலை கண்டித்து

# பிரமாண்டமான ஊர்வலம்

**மே தினத்தன்று, மேதின ஊர்வலம் நடத்தியவர்கள் மீது பொலிஸார் நடத்திய மிருகத்தனமான தாக்குதலைக் கண்டித்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் பிரதேசக் கிளையும், அதன் வெகுஜன ஸ்தாபனங்களும் சேர்ந்து, சென்ற 15 ந் தேதி நடத்திய பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலமும். கூட்டமும் வட பகுதி வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுவிட்டது என்பதில் சந்தேகமே இல்லை.**

மேதினத்தன்று யாழ் பொலிஸார் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் உட்பட பல தோழர்களை காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கி படுகாயப்படுத்தியதும், கொடிய அடக்கு முறையைக் கையாண்டதும் வடபகுதி மக்கள் மத்தியில் குறிப்பாக வெகுஜனங்கள், வாலிபர்கள் மத்தியில் ஆத்திரக் கனலை கிளறிக் கொண்டிருந்தது. அவர்களிடத்தில் ஆவேச உணர்ச்சிகள் குமுறிக் கொண்டிருந்தன. சுன்னாகத்திலிருந்து ஆரம்பமான இந்தப் புரட்சிகரமான ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் மக்களின் மேற்படி ஆத்திரக் கனலையும், ஆவேச உணர்ச்சிகளையும் காணக்கூடியதாயிருந்தது. பல ஆயிரக்கணக்கான மக்களும், பல நூற்றுக்கணக்கான பெண்களும் கலந்துகொண்ட இந்த ஆவேசமிக்க ஊர்வலத்தில், கம்யூனிஸ்ட் கட்சியின் செம் பதாகைகளும், செங்கொடிகளும் வானளாவி வந்ததுடன், உலகப் புரட்சிகர இயக்கத்தினதும், பாட்டாளி வர்க்கத்தினதும் தலைவர்களான

கார்ல் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மா சே துங் ஆகியோரின் படங்களும் உலா வந்தன. குறிப்பாக இன்றைய உலகப் புரட்சிகர இயக்கத்தின் தலைவரும் மாபெரும் மார்க்சிஸ்ட்— லெனினிஸ்டுமான தோழர் மா சே துங்கின் பெரிய அளவிலான படங்களை மாதர்கள் உயரப் பிடித்துக் கொண்டு புரட்சிகர சுலோகங்களை முழங்கியபடி வந்தது பார்த்து நின்றவர்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது எனலாம்.

சுன்னாகத்திலிருந்து யாழ். முற்றவெளிவரை ஆறு மைல்களுக்கு மேலாக நடந்த இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்திற்கு தோழர்கள் எஸ். டி. பண்டாரநாயக்கா, வி. ஏ. கந்தசாமி, கே. டானியல், எஸ். ரி. நாகரத்தினம் ஆகியோர் தலைமை தாங்கிச் சென்றனர்.

## வாலிபர் படையின் புரட்சிகர ஆர்ப்பாட்டம்

ஊர்வலம் ஒரு மைல் நீளமிருந்தது என்று முதலாளித்துவப் பத்திரிகைகளே குறிப்பிடும் அளவுக்கு அது இருந்தது.

ஊர்வலத்தின் முன்னும் பின்னும் ''பாதுகாப்பு'' எனும் பெயரில் முதலாளித்துவ சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டும் பொலிஸார் ஜீப்பிலும், வான்களிலும் சகல விதமான ஆயுதபாணிகளுடனும் நூற்றுக் கணக்கில் வந்தனர். ஆனால், பொலிஸாரின் மிருகத்தனமான தாக்குதல்களை எதிர்த்து கண்டனம் முழங்கும் ஊர்வலத்தினரின் ஆவேச மிக்க குரல் பொலிஸாரின் காதை செவிடுபொடியாக்கின.

ஊர்வலத்தில் காணப்பட்ட உணர்ச்சி வேகமும், பொங்கிவழிந்த உத்வேகமும், கோஷிக்கப்பட்ட சுலோகங்களும், புரட்சிகரத் தலைவர்களின் படங்களும், பெண்களின் வீர

## ஆர்த்தெழுந்த மாதரின் வீர அணிவகுப்பு

மிக்க ஏறு நடையும் முஷ்டி உயர்த்திய கரங்களும், வாலிபர்களின் ஆவேசமிக்க ஆர்ப்பாட்டமும் பிற்போக்குவாதிகளையும், திரிபுவாதக் கும்பலையும் கிலி கொள்ளச் செய்தன. அத்துடன் எதிர்கால அரசியல் பாதை மா சே துங் சிந்தனைப் பாதையே—புரட்சிகரப் பாதையே—என்பதை துலாம்பரமாக எடுத்துக் காட்டின. செல்லரித்துப் போன—வெகுஜனங்களை பிளவுபடுத்துகின்ற பிற்போக்கு, வகுப்புவாத, முதலாளித்துவ பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியலைத் துறந்துவிட்டு, அதன் தலைவர்களையும் கட்சிகளையும் தூக்கி எறிந்துவிட்டு புரட்சிப் பாதையில் செல்லும் சிந்தனை மலர்ந்து விட்டதைக் காட்டின. சுன்னாகத்திலிருந்து யாழ். முற்றவெளிவரை சென்ற இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தைக் காண வழிநெடுகிலும் நின்ற பல்லாயிரக்கணக்கான மக்களைக் கூட இந்த ஊர்வலமும், காணப்பட்ட படங்களும், பெண்களும், சுலோகங்களும், தீரமும் உணர்ச்சியும்கொள்ளச் செய்தன. மொத்தத்தில் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் எழுச்சியின் உருவமாக அமைந்தது

ஆர்ப்பாட்ட ஊர்வலம் யாழ். முற்றவெளியை அடைந்ததும், கூட்டம் ஆரம்பமாயிற்று. கூட்டத்திலும் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். கூட்டத்திற்கு தோழர் வி. ஏ. கந்தசாமி தலைமை வகித்தார். தோழர்கள் எஸ். டி. பண்டாரநாயக்கா, கே. டானியல், வழக்கறிஞர் கரவிட்ட உட்பட பற்றும் பலர் பேசினர்கள்.

தோழர் வி. ஏ. கந்தசாமி தனது தலைமை உரையில், மேதினத்தன்று நடந்த சம்பவங்களை விளக்கி பொலிஸாரின் படுமோசமான செயல்களை அம்பலப்படுத்தினர். மேலும் அவர், மேதினத்தின் முக்கியத்துவத்தை அழித்துவிட பிற்போக்குவாதிகளுடன் சேர்ந்து திரிபுவாதிகள் செய்துவருகின்ற சதிவேலைகளையும் அம்பலமாக்கினர். தோழர் எஸ். டி. பண்டாரநாயக்கா பேசுகையில் மேதினத்தன்று கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் ஊர்வலம் சென்ற தொழிலாளர்களையும், தோழர்களையும் பொலிஸார் மிருகத்தனமாக தாக்கியதை வன்மையாக கண்டித்தார். பொலிஸார் சுரண்டும் வர்க்கத்தாரின் காவல் நாய்களாக எப்படி செயல்படுகிறார்கள் என்பதை அம்பலப்படுத்தினர்.

ஆயிரக் கணக்கில் திரண்டிருந்த மக்கள், கூட்டம் முடியும் வரை முற்ற வெளியில் நின்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

---

◎ 1-ம் பக்கத் தொடர்

றத்தில் ஆசனம் பெறுவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு, அதற்குச் சாதகமான முறையில் செயல்படுகிறார்கள். இதனால் உண்மையான எதிரி மறைக்கப்படுகிறான்.

ஆனால் ஒன்று: உண்மையான எதிரியார்? நண்பர்கள் யார்? என்பதை சாதாரண மக்கள் உணர்ந்துதான் வருகின்றனர். அவர்கள் பொது எதிரிகளையும் அவர்களின் தாசர்களையும்தூக்கி எறியும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

---

## நம்மைச் சுற்றி

◎ 7-ம் பக்கத் தொடர்

வகுப்புவாதத்தை நைஸாகப் புகுத்துவார்கள். இன்று திரிபுவாதிகள் நாறிக் கிடப்பது போல் வேறு யாரும் நாறிக் கிடக்கவில்லை. ஆகவே, அவர்களின் எந்தப் பேச்சும் எடுபடப் போவதில்லை.

★

தேர்தல் நெருங்க நெருங்க மக்களை எப்படியெல்லாம் ஏமாற்றலாம் என்று அரசியல் கட்சிகள் எல்லாம் மூளையைப் போட்டு குழப்பி கொண்டிருக்கின்றன. சில கட்சிகள் அதிர்வெட்டுக்களையும் விடுகின்றன. இப்படியான அதிர்வெட்டுக்களில் ஒன்றை தமிழ்காங்கிரஸ் வட்டாரத்திலும் கேட்டது. அதாவது, தமிழ் காங்கிரஸ் 'மாநாடு' நடத்தப் போகிறதாம். அதில் காங்கிரஸ் சோஷலிஸத்தையும் ஏற்றுக் கொள்கிறது என்று ஒரு தீர்மானம் கொண்டுவரப்படுகிறதாம்.

சோஷலிஸம் உலகம் பரந்த சக்தியாக, வளர்ந்து வருவதையும், இலங்கையில் கூட அதன் செல்வாக்கு மக்கள் மத்தியில் பரவியுள்ளதையும் கண்ட பழுத்த சுரண்டல் காரர்களின் பிற்போக்கு முதலாளித்துவ வர்க்கத்தின் கட்சிகள் கூட சோஷலிஸம் பேசுகிறது. இவர்கள் எல்லாம் சோஷலிஸத்தைக் காதலிக்கத் தொடங்கியதிலிருந்து சோஷலிஸமும் பலரகமாகி விட்டது. அவற்றில் தமிழ்ச் சோஷலிஸமும் ஒன்று. அண்மையில் திரு. இலங்கரத்தின கூட ஒரு ''அற்புதமான'' யோசனையை வெளியிட்டிருந்தார். அதாவது இஸ்லாமிய சோஷலிஸ முன்னணியைப் போல் தமிழர் சோஷலிஸ முன்னணி அமைக்கப் படுவது நல்லது என்று இப்படி இஸ்லாமிய சோஷலிஸம், தமிழ் சோஷலிஸம், சிங்கள சோஷலிஸம் என்று சோஷலிஸத்துக்கு வெட்டுக் கொத்து நடத்துகின்ற இவர்களின் சோஷலிஸ மெல்லாம் சாதாரண மக்களை, தொழிலாளர் விவசாயிகளை ஏமாற்றி அவர்களின் வோட்டுகளைத் தட்டி பறிப்பதுதான். ஆனால் உண்மையான சோஷலிஸத்திற்கும் இவர்களின் சோஷலிஸத்திற்கும் எவ்வித ஒட்டுமில்லை; உறவுமில்லை. உண்மையான சோஷலிஸம் வோட்டால் வராது. வேட்டால்தான் வரும்.

பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஐயசூரிய, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: ''தொழிலாளி'' அச்சகம், 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2